Registered as a NewsPaper

பக்கங்கள் -12 விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி-15 | 29-06-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -132

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத கண்கவர் தங்க நகைகளை சுத்தமான 22 கரட் தங்கத்தில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 077-6059672

(சி-9508)

# கருணாவிற்கு ராணுவம் வழங்கும் ஒத்துழைப்பை

# பாரிய பிரச்சினையாகவே நாம் கருதுகிறோம்!


## போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுத்தலைவரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

**கருணாவை இராணுவம் பாதுகாத்துக் கொண்டும் அரசாங்கம் அவரை பயன்படுத்திக் கொண்டிருக்கும் வரை அவர்கள் இந்த சமாதான முன்னெடுப்புக்களில் ஒரு நம்பகத் தன்மையோடு நடப்பதாக இல்லை என்பதை நாங்கள் இன்று தெளிவாக வெளிக்காட்டியிருக்கின்றோம். ஆகவே இது ஒரு பாரிய நெருக்கடியான சிக்கலான பிரச்சினையாகத்தான் நாங்கள் கருது கின்றோம் எனஅரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நேற்று போர்நிறுத் தக்கண்காணிப்புக்குழுத்தலைவர் தலைமையிலான குழுவின ரைச்சந்தித்துப்பேசியபின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் தெரிவித்ததாவது,

இன்றைய பேச்சு வார்த்தை களின்போது இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரோடு இன்றைய சூழ் நிலைகள் சம்பந்தமாக விவாதித் திருக்கிறோம் முக்கியமாக மட்டக் களப்பு, அம்பாறை மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற பதற்றம் குறித் தும் கருணாவை இராணுவம் தனது பாதுகாப்பில் வைத்துக் கொண்டு இன்று ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற குழப்பங்கள் சம்பந்தமாக அவர்களுக்கு எடுத் துக் கூறியிருக்கின்றோம் குறிப்பாக கருணாவோடு நீண்ட நாட்களாக இணைந்திருந்துவிட்டு தற்போது எங்களிடம் வந்து சேர்ந்துள்ள பெண்போராளிகளுடைய கருத்துக்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## எரிக்சூல்கெய்ம் நாளை தமிழ்ச் செல்வனுடன் சந்திப்பு

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம் நாளை கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

நாளை காலை 09.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்த டையும் இவர் காலை 10.00 மணியளவில் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர் களை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத் தில் சந்தித்து பேச்சு நடத்தவுள் ளார்.

இப்பேச்சுக்களின் போது தேக்க நிலையில் உள்ள சமாதானப் பேச் சுக்கள் தொடர்பாகவும் அவற்றைச் சிறப்பான முறையில் கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் பற்றியும் ஆராயப்பட விருப்பதாக வும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

## கிழக்கில் தற்போதுள்ள சூழ்நிலைகுறித்து புலிகளுடனான சந்திப்பின் போது விவாதித்தோம்

### கண்காணிப்புக் குழுத்துணைத் தலைவர் தெரிவிப்பு

நாங்கள் கிழக்குச் சூழ்நிலை குறித்து விவாதித்தோம். குறிப்பாக இராணுவம் கருணாவிற்கு உதவி செய்வதை நிறுத்தும் வரை தாங் கள் உள்ளூர் மட்டத்திலுள்ள இரா ணுவ அதிகாரிகளுடன் பேசப் போவதில்லைஎன விடுதலைப் புலி கள் தெரிவித்ததைப்பற்றிப் பேசி னோம்.இவ்வாறு தமிழீழ விடு தலைப் புலிகளுடனான சந்திப்பின் போது என்ன விவாதிக்கப்பட்ட தெனவும் இலங்கைப் போர் நிறுத் தக்கண்காணிப்புக் குழுவின் கருத் தென்ன எனவும் கண்காணிப்புக் குழுத் துணைத்தலைவர் ஹக்றூவ் கொக்லண்ட் இடம் கேட்டபோது தெரிவித்தார்.அவர்மேலும் கூறுகை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜூலை 20க்கு முன் பாராளுமன்றத்தை கூட்ட எதிர்க்கட்சிகள் கோரிக்கை

வரும் ஜூலை 20ஆம் திகதிக்குஒத்திவைக்கப்பட்ட பாராளு மன்ற அமர்வை அதற்கு முன் பாகக்கூட்ட சபாநாயகர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றை சமர்ப் பிக்க சிறிலங்காவின் எதிர்க்கட் சிகளின் கூட்டணி தீர்மானித் திருப்பதாக அறிய வருகிறது.

கடந்த வெள்ளியன்று எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவான மகிந்த சமரசிங்க தமது கூட்டணி ஏற்கனவே மாதத்தில்அதிக பாராளு மன்ற அமர்வுகளை நிகழ்த்து மாறு சபாநாயகரை வலியுறுத் தி யிருப்பதாகத் தெரிவித்தார். அத்து டன் உடனடியாகக்கட்சித் தலைவர் களின் சந்திப்பு ஒன்றை தற் போதைய அரசியல் சூழ்நிலை பற்றி ஆராயுமாறும் சபாநாய கரிடம் கேட்டுள்ளதாகக் கூறியுள் ளார்.

இதற்கிடையில் ஜாதிக ஹெல

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாரஊர்திச்சில்லில் நசியுண்டு சிறுவன் பரிதாப மரணம்

பாரஊர்தியின் சில்லினுள்சிக்கிச் சிறுவன் ஒருவன் உடல் நசுங்கிப் பலியாகியுள்ளார். நேற்று முன் தினம் இரவு கரவெட்டி தெற்குப் பிரதேசத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவாஜி கணேசன் - சிவ குமார் (வயது - 08) என்ற சிறு வனே பரிதாபகரமாக மரணமான வராவார்.

பிரஸ்தாப சிறுவனின் வீட் டிற்கு முன்னால் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மேற்படி பாரஊர்தியின் கீழ் இருந்து சிறுவன் விளையாடிக் கொண்டிருப்பதை அறியாத சிலர் அப் பாரஊர்தியை தள்ளி நகர்த்த முற்பட்ட போதே அதன் கீழிருந்து விளையாடிக்கொண்டிருந்த சிறு வன் அதில் நசுங்கிப் பலியாகி யுள்ளார். (33)

### -ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து-

## யாழ்.பல்கலை மருத்துவபீட மாணவி நேற்றுமுதல் சாகும்வரை உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட அதிகாரிகளால் தனக்கு எதிராக உரிமை மீறல்களை மேற்கொள்வதாகத் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி நேற்று முதல் சாகும்வரை உண் ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித் துள்ளார்.

கிருஷ்ணன் புஸ்பமாலா என்ற மாண வியே இப்போராட்டத்தை ஆரம்பித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் முன்வைத் துள்ள கோரிக்கைகளாவன

* 2001ஆம் ஆண்டிலிருந்து இப்பொழு தும் நான் மருத்துவபீட மாணவி என்பதைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்றுக்கொள் வதுடன் கல்வியைத் தொடராது தடுத் தலையும் மருத்துவபீட மாணவிக்குரிய உரி மைகளைப்பெற தடைவிதித்ததும் தவறு என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.
* 2003ஆம் ஆண்டு என்னால் எழுதப்பட்ட இரண்டாவது மருத்துவமாணி பரீட்சையின் பெறுபேறு மூதவையால் உறுதிப்படுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் காணமற் போனோர் குறித்த வழக்கில் ராஜபக்ஷ மீது விசாரணை

(யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில் 1995-1996 ஆண்டுகளில் படையினரால் கைதுசெய் யப்பட்டு காணாமற் போனோரின் உறவு களால் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுத்தாக்கல்கள் தொடர்பில் பாடசாலை மாணவியான செல்வி கிருஷாந்தியைக் கொலை செய்த குற்றச் சாட்டில் குற்றவா ளியாக இனங் காணப்பட்டு மரணதண் டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ நேற்று யாழ்.மேல்நீதிமன்ற நீத வான் எஸ்.வரதராஜாவினால் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் படை அதிகாரியாக இருந்த ராஜபக்ஷவின் தலைமையிலான படையி னரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போன 6 பேர் தொடர்பாக செய்யப்பட்ட மனுத்தாக்கல்கள் தொடர்பிலேயே இவர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

மேற்படி விசாரணைகளுக்காக வெலிக் கடைச் சிறைச்சாலையில் இருந்து இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் யாழ். நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ராஜபக்ஷ சார்பில் வாதிடுவதற்கு சட்டத்தரணி ஒருவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### பைனியர் பொக்ஸ் செற் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள பைனியர் அம்புலிவயர் செற் விற்பனைக்கு உண்டு விலை - 37500/=இ.நவம்கடைகண்ணன் கோயில் வீதி 07ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு (4659)

### கோமான் தையலகம்

யாழ்.சாலை கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கிவந்த கோமான் தையலகம் 25-06-2004 ஆம்(வெள்ளிக்கிழமை) திகதி தொடக்கம் கச்சேரி வீதி கிளி நொச்சி (தமிழீழ வைப்பகம் பின்புறமாக) என்னும் முகவரியில் புதிய கட்டடத்தில் இயங்குகின்றது. என்பதனை வாடிக்கயைாளருக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர்ஸ்டாம்(இறபர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும் போட்டோ கொப்பி லேமினேட்டிங் போன்றவை களையும் உடனுக்குடன் செய்துகொள்ள, பிள்ளையார் பொத்தகசாலைகண்டி வீதி கிளிநொச்சி.T..P. 021 228 5750 (சி.9823)

### கருத்தரங்கு

யூலை-24 ஆசிரியர் தெரிவுப் போட்டிப்பரீட்சை கேம்பிரிஜ் கல்லூரி உதயநகர்மேற்குகிளி நொச்சி பொது உளச்சார்பு வகுப்பு காலம்-03-06-2004 சனி மாலை-4.00-7.00 விரிவுரை:- வவுனியா, கிளி நொச்சி விரிவுரையாளர்களால் நடத்தப்படும் கட்டணம்-50/= அனு மதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும். நிர்வாகி.(4756)

# கிளி.புனித சென்.திரேசாவில் புதிய கட்டடத் திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒரேஒரு பெண்கள் பாடசாலையான கிளி.புனிதசென் திரேசா பெண்கள் கல்லூரியில் புதிய கட்டடமொன்று நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காலை 10.00மணிக்கு பள்ளி முதல்வர் திருமதி இ.அரியரட்ணம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரினை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஏற்றிவைத்தார், தேசியக் கொடியினை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார், மங்கல விளக்கினை பிரதிக்கல்விப் பணிப்பாளர் க. சிவசாமி அவர்களும், பேரவைத்தலைவர் கணேசபிள்ளை அவர்களும் ஏற்றி வைத்தனர், பெயர்ப்பலகையினை வலயக்கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம் அவர்கள் திறந்துவைக்க கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். தொடர்ந்து வரவேற்புரையினை ஆசிரியர் ஜெயசீலி துரைசிங்கம் நிகழ்த்தினார். ஆசியுரையினை சிவசிறி இரத்தினேஸ்வரகுருக்கள் பேரவைத தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.


வலயக்கல்விப்பணிப்பாளர், தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர். தொடர்ந்து நன்றி உரையினை பாடசாலைஅபிவிருத்திச்சங்க செயலாளர் தி.நவரத்தினராசா நிகழ்த்தினார். இதில் பெற்றோர், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (தீ,ச)

# லெப்.கேணல்கில்மனின் நினைவுநாள் நேற்று நாகர்கோவிலில் அனுஷ்டிப்பு

28.06.1995 அன்று வீரச்சாவை தழுவிகொண்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புபடையனியின் சிறப்புத்தளபதி லெப்டினனட் கேணல் கில்மன்/காந்தன் அவர்களின் 9ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் களமுனை தளபதிகளின் ஒருவரான மிரேஸ் அவர்களின் தலமையில் நாகர்கோவிலில் அமைந்துள்ள மேஜர் கிண்னி நினைவாலயத்தில் நேற்று நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு ஆரம்பமான நினைவு நிகழ்வில் முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையனியின் களமுனைத் தளபதிகளின் ஒருவரானதென்னரசன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தேசியக் கொடியினை வடபோர்முனைக் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான லெப்டினனட் கேணல் குமரன் ஏற்றி வைக்க தொடர்ந்து சாள்ஸ்அன்ரனி சிறப்பு படையனியின் கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையினரின் தாக்குதல் தளபதி பிரபாலன்அவர்கள் ஏற்றிவைத்தார். மாவீரன் லெப்டினனட் கேணல் கில்மன் அவர்களின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை படையணியின் தளபதிகளில் ஒருவரான செங்கோலன் ஏற்றிவைத்தார்.மேஜர் கிண்ணி அவர்களின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினை பொன்னம்மான் கண்ணி வெடிப் பிரிவைச் சேர்ந்த நாகர் கோயில் பொறுப்பாளரான சந்தியா ஏற்றி வைத்தார்.மாவீரன் லெப்டினன்ட் கேணல் கில்மன் அவருக்கான மலர் மாலையினை குட்டிசிறி மோட்டார் படையணியின் நாகர்கோவில் பொறுப்பாளர் மருதவாணி அணிவித்தார். மலர் அஞ்சலியை வட போர்முனைத் தளபதிகளில் ஒருவரான பேரின்பன் ஆரம்பித்து வைக்கத் தொடர்ந்து அனைத்துப் போராளிகளும் மலர் அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து அகவணக்கமும் உறுதியுரையும் நடைபெற்றன. தொடர்ந்து அரங்க நிகழ்வுகளாக சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான செந்தூரனின் தலைமையில் இடம் பெற்றது. இந்த நினைவு நிகழ்வில் மாவீரன் லெப்டினனட் கேணல் கில்மன் அவர்களின் நினைவாக கவிதை,பாடல் ஏனைய சில சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இந்த நினைவு நிகழ்வில் சிறப்பு உரையினை தளபதி குமரன் அவர்கள் நிகழ்த்தினார். நினைவுரையினை படையணியின் தளபதியில் ஒருவரான மிரேஷ் அவர்கள் நிகழ்த்த மதியம் 12.00 மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

# திருமறைக்காலாமன்றத்தால் இசைவிடுதூது இறுவெட்டு வெளியீடு

திருமறைக்கலாமன்றம் தயாரித்து வெளியிட்ட "இசைவிடு தூது" சமாதானப் பாடல்கள் அடங்கிய இறுவெட்டு வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் மாலை திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெற்றது. ஈழத்தின் பிரபல இசையமைப்பாளர் கண்ணன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில் இறுவெட்டின் முதற் பிரதியை இசைத்தென்றல் ம.யேசுதாசன் வெளியிட்டு



வைக்க யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் முகாமையாளர் சுவாம்பிள்ளை ஹென்றி பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மதிப்பீட்டுரையினையும், அருள் திரு. ஏ.ஐ.பேனாட் அடிகள் அவர்கள் சிறப்புரையினையும், இசையமைப்பாளர் கண்ணன் அவர்கள் பிரதம விருந்தினர் உரையினையும் நிகழ்த்தினர். 10 பாடல்களைக் கொண்ட இவ் இறுவெட்டின் இசையமைப்பாளர் ம.யேசுதாசன்அவர்கள் பதிலுரையினை நிகழ்த்தினார் தொடர்ந்து கலைஞர்களுக்கான கௌரவிப்பு நடைபெற்றது.


# 12 ஆம் ஆண்டில் உங்கள் நினைவுகளுடன்...

தாயின் மடியில்
13-01-1966



அழகனே!
நீ நட்டபூச்செடி
பந்தல்கால் பற்றிப்
படர்ந்து...
நிழல்பரப்பி நிற்கிறது.
நன்றி மறவோம்
உன் நினைவுடன்தான்
எம் நாளாந்தம்

தாயக மண்ணில்
29-06-1992

## மேஜர் அழகன்

(முன்னாள் ஈழநாதம் பொறுப்பாளர்)
செல்வராசா இளங்கோ
கல்வயல், சாவகச்சேரி.

பொறுப்பாளர்,
பணியாளர்கள்
ஈழநாதம்.

யாழ்ப்பாணம்




ஈராக்கில் பாக்தாத்துக்கண்மையில் வீதியோரமாக புதைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றை வெடிக்கச் செய்யும் அமெரிக்க கண்ணிவெடியகற்றும் குழுவையும் இராணுவ வீரரொருவர் கண்காணிப்பில் ஈடுபடுவதையும் காணலாம்.

# அவுஸ்திரேலிய விமானம் மீது ஈராக்கில் தாக்குதல்

## அமெ. ஒப்பந்தகாரர் பலி

(பாக்தாத்)

அவுஸ்திரேலிய இராணுவ போக்குவரத்திற்கான விமானம் ஒன்றின் மீது ஈராக்கில் தாக்குதல் நடத்தப்பட்டவேளை அமெரிக்க ஒப்பந்தக்காரர் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார் என அவுஸ்திரேலியா வின் பாதுகாப்புத் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

பாக்தாத்திலிருந்து விமானம் புறப்பட்டவேளை, அதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. அவுஸ்திரேலியா வின் 2000இற்கும் அதிகமான இராணுவ வீரர்கள் பாக்தாத்தில் கடமையாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பகுதாத் அடம்பூர் சனாதிபதியாகத் தெரிவு

லிந்துவோனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சனாதிபதி தேர்தலில் பகுதாத் அடம்பூத் 52 சதவீத வாக்குகளைப் பெற்று சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்.

என்னை லித்வேனிய மக்கள் தெரிவு செய்ததன் மூலம் எதிர் காலத்திற்கான சிறந்த வழியை உருவாக்கி உள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்..

# ஈராக்கின் ஆட்சிப்பொறுப்பு நேற்று இடைக்கால நிர்வாகத்திடம் ஒப்படைப்பு

(பாக்தாத்)

**ஈராக்கின் ஆட்சிப்பொறுப்பை அந்தநாட்டின் இடைக்கால அரசிடம் அமெரிக்கா நேற்றுக் கையளித்துள்ள அதேவேளை, ஈராக்கிலுள்ள ஒரு இலட்சத்தி 60 ஆயிரம் அமெரிக்கப் படையினரே ஈராக்கின் இடைக்கால அரசிற்குப் பாதுகாப்பாக இருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த கையளிப்பு இந்த மாதம் 30ஆம் திகதியே நடைபெற இருந்தபோதிலும் இரண்டு தினங்களிற்கு முன்னமே இந்நிகழ்வு இடம்பெற்றிருக்கின்றது.

இவ் ஆட்சி ஒப்படைப்பு மூலம் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் ஈராக்கில் 14 மாதங்களுக்கு மேலாக நிலை கொண்டிருந்த சர்ச்சைக்குரிய விவகாரம் சம்பிரதாயபூர்வமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. எவ்வித முன் அறிவித்தலும் இன்றி ஈராகிய மக்கள் அறிந்திராத வகையில் இந்த ஆட்சிமாற்றம் நேற்று நடைபெற்றிருக்கிறது. பதவியை விட்டு வெளியேறும் ஈராக்கின் அமெரிக்க ஆளுனர் போல் பிறேமர் ஆட்சி கைம்மாற்றத்திற்கான கடிதத்தை ஈராக்கிய அதிகாரிகளிடம் கையளித்துள்ளார்.

இதேவேளை, புதிய ஈராக்கிய அரசின் படைகளுக்கு பயிற்சி வழங்குவதில் உதவ நேட்டோ நாடுகளின் தலைவர்கள் அதிகாரபூர்வமாக இணக்கம் தெரிவித்துள்ளனர். துருக்கியில் இடம்பெற்ற மாநாட்டிலேயே இந்த இணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.



ஈராக்கில் கொல்லப்பட்ட தென்கொரிய பயணக் கைதியான கிம்-சுன்லின் பூதவுடல் தாங்கிவரும் வாகனத்துக்குப் பாது காப்பளிக்கும் விசேட பொலிஸ் படையினர்.

# மேற்குக் கரையில் இஸ்.இராணுவம் தாக்குதல் தீவிரவாதிகள் மூவர் உட்பட ஏழுபேர் பலி

மேற்குக்கரைப் பகுதியில் நடத்திய தாக்குதலில் இஸ்ரேல் இராணுவம் நேற்று மூன்று முக்கிய தீவிரவாதிகளின் தலைவர்கள் உட்பட எழுபேர் கொல்லப் பட்டுள்ளனர் என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

மேற்காசியாவில் யுத்த பூமியாக இருந்துவரும் இஸ்ரேல் பலஸ்தீனத்தில் நாளாந்தம் உயிர்ப்பலி தற்போது அதிகரித்து வருகின்றது.

பலஸ்தீனத்தில் நாவாஸ் நகரில் இஸ்ரேல் இராணுவம் ரோந்து சுற்றி வந்தவேளை கட்டடச் சுவருக்குப் பின்னால் இருந்த தீவிரவாதிகளின் இஸ்ரேல் இராணுவத்தினர் மீது வெடிகுண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் நேற்று முன்தினம் நடத்தியதாக்குதலுக்குப் பதிலடியாகவே இஸ்ரேலிய இராணுவம் இத்தாக்குதலை நடத்தியுள்ளது.

# ஈராக்கில் பாக்.பிரஜை தீவிரவாதிகளால் கடத்தல்

(இஸ்லாமாபாத்)

ஈராக்கில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஓட்டுனர் ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளதாகத் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். இவர்கள் சிறையில் உள்ள தமது சகாக்களை மூன்று நாட்களுக்குள் விடுவிக்கவில்லையெனில் அவரைக் கொன்றுவிடப்போவதாக எச்சரித்துள்ளனர். இதுபற்றிய வீடியோவை சவுதிஅரேபிய தொலைக்காட்சி ஒன்று ஒலிபரப்பியுள்ளது. இதேவேளை துருக்கிப் படைகளை ஈராக்கில் இருந்து வாபஸ் பெறாவிட்டால் தங்களிடம் இருக்கும் துருக்கி நாட்டைச்சேர்ந்த மூன்றுபேரைக் கொன்றுவிடப் போவதாகத் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அல்-ஹைதா ஆதரவு தீவிரவாதிகள் பாகிஸ்தானிலிருந்து விரட்டியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்பொழுது பாகிஸ்தான்நபர் ஒருவர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளார்.

# இஸ்.இராணுவத் தாக்குதலைக் கண்டித்து பலஸ்தீனத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து காஸாப் பகுதியில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

பலஸ்தீனர்கள் வசிக்கும் மேற்குக்கரைப் பகுதியில் உள்ள நெபிலஸ் என்ற இடத்தில் இஸ்ரேலிய இராணுவம் கடந்த 26ஆம் திகதி மேற்கொண்ட நடவடிக்கையில் யசீர் அரபாத்தின் பட்டா கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அபுசேக் எட்டுப்பேர் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பலஸ்தீனத் தீவிரவாத இயக்கமான கமாஸ் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தின்போது கோஷங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இதனிடையே தெற்குக் காஸாப் பகுதியில் இஸ்ரேலிய இராணுவ மையம் நேற்று முன்தினம் குண்டுவெடிப்பின் போது பலத்த சேதமடைந்தது. இதில் இஸ்ரேலிய வீரர் கொல்லப்பட்டதுடன் பல வீரர்கள் காயமடைந்துள்ளனர்.


# மெக்சிக்கோவில் அரசிற்கெதிராக மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி

மெக்சிக்கோ அரசு சட்டங்களை சரியாக பேணவில்லை என்பதை கண்டித்து நகரில் எதிர்ப்பு ஊர்வலம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இவ் ஊர்வலத்தில் சுமார் மூன்று லட்சம் பேர் பங்கு பற்றியுள்ளனர். உலகில் குற்றங்கள் நிறைந்த நாடுகளில் மெக்சிக்கோ முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. தொடரும் குற்றச் செயல்களை ஆட்சியாளர்கள் கட்டுப்படுத்தத் தவறிவிட்டார்களென அரசாங்க எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்னர்.

கடந்த 10 ஆண்டுகளில் மெக்சிக்கோவில் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் இணைந்து கொண்ட ஊர்வலமாக இது அமைந்துள்ளது. சட்டங்களை மீறுவோருக்கு எதிராக மரணதண்டனை விதிக்கப்பட வேண்டுமென ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் வலியுறுத்தியுள்ளனர். 1992ஆம் ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இங்கு 15ஆயிரம் பேர் கடத்தப்பட்டுள்ளனர். உலகில் கொலம்பியாவிற்கு அடுத்தபடியாக அதிக நபர்கள் கடத்தப்படும் நாடாக மெக்சிக்கோ காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஈரானிய கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப் பட்ட பிரித்தானிய றோயல் கடற்படை சிப்பாய்கள் குவைத் சர்வதேச விமான நிலையத்தில் அவர்களது முகாமுக்கு செல்ல உலங்குவானூர்தியில் ஏறுகின்றனர்.




"குற்றவாளிகளை சித்திரவதை செய்வதையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்வதையும் நிறுத்து" என்ற துருக்கிய மொழி வாசகத்தையும் அமெரிக்க அதிபர் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர் ஆகியோரின் உருவப்படங்களையும் ஏந்தி ஸ்தான்புல் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் முஸ்லிம்கள்.


# வங்கிச் சேவைகளின் சீரின்மை குறித்து அரச அதிபரிடம் மக்கள் முறைப்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இயங்கிவரும் மக்கள்வங்கி இலங்கைவங்கி ஆகிய இரண்டும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வில்லையென முல்லைத்தீவு மக்கள் அரச அதிபரிடம் தெரிவித்தனர்.

இலங்கை வங்கி வாரத்தில் 5நாட்கள் செயற்பட்ட போதும் பி.ப.1.00 மணியுடன் தமது சேவையை நிறைவு செய்வதால் தூரஇடத்திலிருந்து வருகைதரும் மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்யாது திரும்பவேண்டிய தேவை உள்ளதாகவும் அலுவலகங்களின் உடனடித்தேவைக்காகவும் குறைந்தது 3மணிவரை திறந்து வைத்து சேவையாற்றுமாறு அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் மக்கள் வங்கி வாரத்தில் இருநாட்கள் மட்டுமே முல்லைத்தீவில் இயங்கி வருகின்றது.இவர்கள் முழுமையாக இயங்குவதற்காக கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம் தனது கட்டடமொன்றை 30.06.2004முதல் தருவதாகக் கூறியும் தாம் வந்து இயங்க முடியாது என அரச அதிபரிடம் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (20)



பல வருடகாலமாக மக்கள் போக்குவரத்திற்கு பாரிய இடையூறாக விளங்கிய கோணாவில்-ஸ்கந்தபுரம் வீதியிலுள்ள மரப்பாலம் நெக்கோட் நிறுவனத்தினரால் புதிதாகநிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளதனை படத்தில் காணலாம். (படம் சோதி)

## விரிவுரை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தில் நோர்வே தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள்ஆறுவர் விரிவுரைகளை நடாத்தி வருகின்றனர்.

இவ்விரிவுரைகளைத் தொழில் நுட்பக்கல்வி நிறுவன பூநகரிப் பிராந்திய நிலையத்திலும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (15)


### தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால்

# சிறுவர் நலத்திட்டத்தினூடாக கடந்த மாதம் 67 சிறுவர்கள் பாடசாலைகளில் இணைப்பு

(அலுவலக செய்தியாளர்)

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சிறுவர் நலத்திட்டத்தின் கீழ் கடந்த மாதம் பாடசாலை செல்லாத 67 சிறுவர்கள் இனங்காணப்பட்டு மீண்டும் பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ளனர்.**

மேற்படி சிறுவர் நலத்திட்டத்தினர் கிராமம் கிராமமாக தரிசிப்பினை மேற்கொண்டு அக்கிராமங்களில் பாடசாலையை விட்டு விலகியவர்களை இனங்கண்டு அவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்து வருகின்றனர்.இதன் அடிப்படையில் கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலருக்குட்பட்ட கிராமங்களில் மட்டும் 67 சிறுவர்கள் இனங்காணப்பட்டு பாடசாலைகளில் இணைக்கப் பட்டுள்ளனர். என தமிழர் புனர்வாழ்வுக்கழகசிறுவர்நலத்திட்ட கிளிநொச்சிமாவட்நிகழ்ச்சி திட்ட அலுவலர் மதனமோகன் தெரிவித்தார்.



இவ்வாறு இணைக்கப்பட்ட 67 மாணவர்களுக்கும் பாடசாலை சீருடைகள் உட்பட கற்றல் உபகரணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. அத்தோடு இவர்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு தேவைக்கேற்ப தொடர்ந்தும் கல்வி கற்பதற்கான உதவிகள் வழங்கப்படும் மேற்படி சிறார்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இடைநிறுத்தப்படு வதற்கு முக்கிய காரணங்களாக பெற்றோர் படிப்பு பற்றிய விழிப்புணர்வில்லாதிருக்கின்றமையும் வறுமையுமே காரணமாக அமைகின்றன. எனவே கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மேலும் தெரிவித்த அவர்,

இது தவிர வயது வந்தும் பாடசாலைக்கு இது வரை செல்லாது இருந்த 26 பேரும் கடந்த மாதம் பாடசாலையில் இணைக் கப்படடனர். மேலும் நோயுற்று இருந்த 10 சிறுவர்களுக்கு மருத்துவ வசதிகளும்செய்து கொடுக்கப்பட்டது இதேவேளை, மனநலம் பாதிக்கப பட்ட சிறுவர்கள் சிலரும் அன்னை இல்லத்தில் இணைக்கப்பட்டுளளனர்.அத்தோடு 215 சிறுவர்கள் கைத்தொழில் பயிற்சிக்காவும் இனங்காணப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்எனவும்கூறினார். .(ச)

### குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க

# கிராம மக்கள் ஒன்றிணைந்து பொதுக்கிணறு அமைப்பு

(முள்ளியவளை)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நாவற்காடு கிராமத்தில் அப்பகுதி மக்களினால் பொதுக்கிணறு அமைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது ஏற்பட்டுவரும் வரட்சி காரணமாக அப்பகுதியில் உள்ள சில கிணறுகள் நீர் வற்றியுள்ளதுடன் அப்பகுதியில் வெளிநாட்டு நிறுவன நிதியுதவியுடன் அரசசார்பற்ற நிறுவனங்களினால் அமைக்கப்பட்ட மூன்று கிணறுகளும் முழுமையாக நீர்வற்றியுள்ளதால் அம்மக்கள் குடிநீருக்காக அலையும் நிலையைக் கருத்திற்கொண்டு முள்ளியவளைப் பிரதேச ஊரகவளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் வை.குமரனின் ஒழுங்குபடுத்தலில் பொதுக்கிணறு வெட்டப்பட்டு முழுமைகாணும் நிலையில் உள்ளது.

பின்தங்கிய நிலையில் இருந்த மேற்படிக் கிராமம் விடுதலைப் புலிகளின் பிரதேச ஊரகவளர்ச்சிப் பணிப் பொறுப்பாளரின் வழிநடத்தலில் காணியற்றவர்களுக்கு காணிவழங்கப்பட்டும் மாணவர்களைக் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தியும் தொழில் வாய்ப்பளித்தும் அக்கிராமம் மேலானமுறையில் வளர்ச்சி கண்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ஆ)

### -மன்னார் ஆதாரவைத்தியசாலை

# சிறுவர் அவசரசிகிச்சைப் பிரிவிற்கு வேல்ட்விஷன்உதவிவழங்கல்

(மன்னார்)

மன்னார் ஆதார வைத்திய சாலையில் சிறுவர் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு வேல்ட்விஷன் நிறுவனம் ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது. சுமார் நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் இவ்வாறு வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டவைத்திய அதிகாரியிடம் அண்மையில் வேல்ட்விஷன் நிறுவன பிராந்திய முகாமையாளர் என்.எம். ரவிசங்கர் இவ் உபகரணத்தொகுதியை கையளித்தார். (மி)

# முன்பள்ளி சிறார்களின் வருடாந்த திறனாய்வு

முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

விசுவமடு மேற்கு ரூபன் முனபள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டுவிழா முன்பள்ளி மைதானத்தில் கடந்த 21ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது.

வற்றாப்பளை நிரஞ்சன் முன்பள்ளி விளையாட்டுவிழா 22ஆம் திகதி பி.ப.3.00மணிக்கு முன்பள்ளி ஆசிரியை சி.இராஜராஜேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

கடந்த 25ஆம் திகதி வட்டக்கச்சி சம்புக்குளம் கஜந்தா முன்பள்ளி விளையாட்டுவிழா முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. இதேவேளை அளம்பில் பெனாசீர் முன்பள்ளி விளையாட்டுவிழாவும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவர் வீனஸ் தலைமையிலும் பள்ளிக்குடா கட்டன் தனபால் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி செல்வி.சயந்தா தலைமையிலும் நடைபெற்றது.

கடந்த 26ஆம் திகதி வட்டக்கச்சி தென் இந்தியத் திருச்சபை சிறார்களின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டி பி.ப.2.00 மணியளவில் முன்பள்ளித் தலைவர் வே.செல்வநாயகமூர்த்தி தலைமையிலும் நடைபெற்றது. விசுவமடு மாணிக்கபுரம் கார்த்திகன் முன்பள்ளி, உடையார்கட்டு குரவில் விவேகானந்தா ஆகிய இரண்டு முன்பள்ளிகளின் வருடாந்த முன்பள்ளி விளையாட்டுவிழா 26ஆம் திகதியும், 28ஆம் திகதியும் நடைபெற்றுள்ளது.

வட்டக்கச்சி முகமட் முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டுவிழா நேற்று முன்தினம் பிற்பகல் 2.40மணியளவில் நடைபெற்றது. கூழாமுறிப்பு பாரதி முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டுவிழா சி.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் சுதாங்கனி முன்பள்ளி சிறார்களின் திறனாய்வுப்போட்டி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலையில் இடமபெற்றது. (19,12,ஆ,05,தீ,ச,20,34)

# யூலை -5 கரும்புலிகள் நாளை சிறப்பாக கொண்டாட ஏற்பாடு

(மல்லாவி)

யூலை 5ஆம் திகதி அனுஷ்டிக்கவுள்ள கரும்புலிகள் தினத்திற்கான ஏற்பாட்டு நடவடிக்கைகள் குறித்து மல்லாவி பாலைப்பாணி தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் பாலேந்திரன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட பாண்டியன்குள அரசியல்துறைப்பொறுப்பாளர் வேங்கைமாறன் ஆசிரியர் மா. ஜெகநாதன் பா.தவலோகசிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

இதன்போது கடும்புலிகள் நாள் மிகவும் எழுச்சியாகவும் நடைபெற வேண்டுமெனவும் சிரமதானம் கிராமரீதியாக பெறவேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டது.

அன்றைய தினம் சிரமதானப் பணியும் இடம்பெற்றது. பாலைப்பாணி பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரும் இச்சிரமதானத்தில் பங்கு பற்றினர்.

இதேவேளை கரும்புலிகள் நாள் சம்பந்தமான கலந்துரையாடல் நிகழ்வு குமுதன் குடியிருப்பு மாவீரர் படிப்பகத்தின் வளாகத்தில் சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு குடியிருப்புத்தலைவர் அன்ரனி தலைமையில் இடம்பெற்றது. கலந்துரையாடல் துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் முல்லை. மாவட்ட பெண்கள் மேம்பாட்டு பொறுப்பாளர் அன்பரசி ஆகியோர் கருத்துக்களை வழங்கியுள்ளனர்.

கரும்புலிகள் நாளை சிறப்பாக மேற்கொள்ளவேண்டுமெனவும் அன்றைய தினம் சிரமதானப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கருத்துக்கள் வழங்கப்பட்டது.

இதில் பெண்கள் தொடர்பான கருத்துக்களையும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் குமுதன் குடியிருப்பு மக்கள் கலந்து கொண்டுள்ளனர். (24)

# தேசிய எழுச்சிப் பேரவையின் கோட்ட மட்ட கலந்துரையாடல்

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதேச தமிழீழ தேசிய எழுச்சிபேரவையின் கூட்டம் கடந்த 24 ஆம் திகதியன்று முள்ளியவளை கோட்டதேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கி.தியாகராசா தலைமையில் பி.ப.4.00 மணிக்கு முள்ளியவளை பிரதேச அரசியல்துறை செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் முள்ளியவளை வலயத்திற்குட் பட்ட ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கருத்துரைகளை முள்ளியவளை வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் நாகமைந்தன் அரசியல்துறைசெயலக முள்ளியவளை இணைப்பாளர் கலைவாணன், முள்ளியவளை பிரதேச ஊரக வளர்ச்சிப்பணிப்பொறுப்பாளர் வை.குமரன் ஆகியோருடன் தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடு தொடர்பாகவும் கரும்புலிகள் தின நிகழ்வு தொடர்பாகவும் முல்லை. மாவட்ட தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் மயூரன் சிறப்புரை நிகழ்த்தியதையடுத்து நிகழ்வு நிறைவானது. (ஆ)

# இ.த.அதிகாரசபையை புலிகளிடம் கையளிக்க அரசு தவறின் தேசியத்தலைவரின் அணியில் மக்கள் திரண்டு தமிழீழத்தை அமைப்பர்

## பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்

(யாழ்ப்பாணம்)

தமிழீழவிடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைக்கையளிக்க சிறிலங்கா அரசாங்கம் தவறினால் தமிழ் மக்கள் தனித்தமிழீழத்தை அமைத்துக் கொள்ளும் நிலை உருவாகும்.

இவ்வாறு நேற்று முன்தினம் சாவகச்சேரியிலுள்ள "ராஜ் அகத்தில்" இடம்பெற்ற சமகால அரசியற் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழத் தேசியகூட்டமைப்பின் பாராளுமன்றஉறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக போராடியதன் பயனாக யுத்த நிறுத்தத்தை இதயசுத்தியுடன் கடைப்பிடித்து வருகின்றனர். அத்துடன் கடந்தகாலங்களைப் போல் இம்முறையும் தமிழ்த்தரப்பு ஏமாற்றப்படக் கூடாது என்பதற்காகவும் யுத்தத்தால் அழிவடைந்த தமிழர் தாயகப் பகுதிகளை கட்டியெழுப்புவதற்காகவும் இடைக்கால நிர்வாக சபையை புலிகள் தமிழர் சார்பாக கோரியுள்ளனர்.

இக்கோரிக்கையை அரசு அலட்சியம் செய்து எரிகின்ற எமது இனப்பிரச்சினையில் விளையாட முற்படுமேயானால் தமிழீழத் தேசியத்தலைவரின் அணியில் திரண்டு தமிழ்மக்கள் தமக்கான தனிநாட்டை அமைத்துக்கொள்வர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

# வெல்ல உற்பத்தி ஆலை பெரியவிளானில் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் யாழ்.பெரியவிளான் பிரதேசத்தில் வெல்ல உற்பத்தி ஆலைஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் வாழ்ந்து வரும் பனை,தென்னை வள உற்பத்தியாளர்களின் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டே இவ்வெல்ல உற்பத்தி ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆலையில் பனை, தென்னைவள உற்பத்தியாளர்களிடமிருந்து பதநீர் கொள்வனவு செய்யப்பட்டு வெல்லமாக தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (33)

## விண்ணப்பங்கள் திறைசேரிக்கு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் உள்ள 347 தொழிலற்ற பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் சாவகச்சேரி பிரதேசசபை ஊடாகப் பெறப்பட்டு இவற்றுக்கான நேர்முகத்தேர்வு நடைபெற்று கொழும்பிலுள்ள அரசின் திறை சேரிக்குஅனுப்பி வைக்கப் பட்டுள்ளது எனத் தெரியவருகிறது (28)

# சாவகச்சேரிப் பிரதேச சபையின் சுற்றாடல் கலைவிழா

(தென்மராட்சி)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபை ஏற்பாட்டில் மாபெரும் சுற்றாடல் சம்பந்தமான கலைவிழா பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திரு.ந.பாலச்சந்திரன் செயலாளர் (சாவகச்சேரி பிரதேசசபை),பிரதம விருந்தினர்கள் திரு.எஸ்.சிறி நிவாசன் (பிரதேசசெயலாளர் தென்மராட்சி),திருமதி. எஸ்.சத்திய குமார்(சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் O.I.C, உபஅலுவலகம் யாழ்ப்பாணம்),திரு.ரி.திருக்குமரன் (பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் கச்சேரி)திரு.கே.வசந்தரூபா(பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் கச்சேரி), திரு.என்.கருணாகரன்(பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்), திரு.கலைவாணன்(பொறுப்பாளர் தென்மராட்சி அரசியல்துறை) திரு.சூரியராஜ்(பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்மாநகரசபை) திரு.ஜீவபாபு பிரதேச சுற்றாடல் , உத்தியோ கத்தர் பருத்தித்துறை மற்றும் பொதுமக்கள் மாணவர்கள் இந்நிகழ்வில்கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளார்கள் இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பாடசாலை மட்டத்திலான சுற்றாடல் சம்பந்தமான போட்டியும் நடைபெறவுள்ளது. இதில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் படவுள்ளனர். (28)

# சமாதான நீதவான்களுக்கெதிராக முறைப்பாடு நடவடிக்கை எடுக்க நீதி அமைச்சர் குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றி வரும் சமாதான நீதவான்களின் தராதரங்கள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்தகாலங்களில்யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்ட சமாதான நீதவான்களுக்கான நியமனங்கள் அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்தி வழங்கப்பட்டிருப் பதாகவும் இவ்வாறு அரசியல் வாதிகளின் சிபாரிசுகளின் பேரில் சமாதான நீதவான்களாக நியமனம் பெற்றோர் சமாதான நீதவான்களாக சேவையாற்றத் தகுதி [illegible]வர்களாக இருப்பதுடன், சில மோசடிகளிலும் ஈடுபட்டு வருவதாக சிறிலங்கா நீதி அமைச்சுக்குக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே சமாதான நீதவான்களின் தராதரம் குறித்து ஆராய்ந்து தகுதியற்றவர்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கென நீதி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (33)

# பாதிக்கப்பட்ட மாணவருக்கு பிரிட்டிஷ் அரசு உதவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவ பிரிட்டிஷ் அரசாங்கம் முன்வந்துள்ளது.கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு கல்வி நிலையில் பின்தங்கிப்போயுள்ள யாழ்.மாவட்ட மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டே பிரிட்டிஷ் அரசாங்கம் உதவமுன் வந்துள்ளது.அடுத்தமாதம் முதல் துரிதமாக நடைமுறைக்கு வரவுள்ள 6 மாதத்திற்கான இத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 20800 மாணவர்கள் பயன்பெறுவர் எனவும தெரிவிக்கப் பட்டுள்ளது. (33)

# தீவகப்பகுதி நிலைமைகள் குறித்து வேலணையில் புலிகள் ஆராய்வு

(தீவகம்)

யாழ்.தீவகப் பிரதேச மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் முக்கிய ஒன்றுகூடல் ஒன்று நேற்று முன்தினம் வேலணையில் உள்ள தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு செயலக மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் சர்வதேச தமிழீழமாணவர்பேரவை உறுப்பினர்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர், போராளிகள், பொது மக்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது தீவகப்பிரதேச மக்கள் சிறிலங்காக் கடற்படையினரால் எதிர்கொள்ளும் பாஸ் கெடுபிடிகள், பாதுகாப்பு வலய நடைமுறைகள் மற்றும் சோதனைக் கெடுபிடிகள் உட்பட மக்கள் எதிர் கொள்ளும் இயல்புவாழ்வுப் பிரச்சினைகள் மற்றும் அடிப்படை வசதியீனங்கள் என்பன குறித்து ஆராயப்பட்டது. (33)

# யாழ்.இல் பொலுத்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த அரசஅதிபர் நடவடிக்கை

யாழ்.குடாநாட்டில் பொலுத்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த யாழ். அரசசெயலகம் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் அதி கரித்துள்ள பொலுத்தீன் பாவ னைகளாலும்,பொலுத்தீன் கழிவு களாலும் சூழலின் இயல்பு நிலை கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய நிலைஏற்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டப் பட்டதைத் தொடர்ந்து பொலுத் தீன் பாவனையைக் கட்டுப்படுத்த யாழ்.அரசசெயலகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

அத்துடன் உக்கி சேதமடைந்து போகக் கூடிய பொலுத்தீன் வகைகளையும் பொலுத்தீனுக்குப் பிரதியீடாக பயன்படுத்தக் கூடிய உறைவகைகளையும் யாழ்.குடாநாட்டில் அறிமுகப்படுத்த யாழ். அரச செயலகம் திட்டமிட்டிருகிறது. (33)

## விரிவுபடுத்த நடவடிக்கை

உலகவங்கி உதவியுடன் தற்போது தொடங்கப்படவுள்ள மட்டுவில்மத்தி, கோயிலாக் கண்டியில் ஐம்பது வீடுகள் கட்டும் திட்டத்தை தென்மராட்சியில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2005 ஆம்ஆண்டளவில் விரிவுபடுத்தத் தற்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன இதற்கான ஆய்வுகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (28)

## கொடுப்பனவு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் பணியாற்றும் கிராம அலுவலர் களுக்கான பதில் கடமை கொடுப்பனவுகள் விரைவில் கொடுக்கப்படவுள்ளன. இதற்கான பணிகள் தற்பொழுது நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது. (28)

## -சாவகச்சேரி மகளிர்கல்லூரிக்கு-

# நவீன கற்றல் வசதிகளுடன் அறை ஒன்று அமைப்பு

யாழ்.சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நவீன கற்றல் வசதிகள் கொண்ட ஒலி ஒளி சம்பந்தமான கல்வி நடவடிக்கைகளுக்கான செயற்பாட்டு அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மேற்படி பாடசாலை மாணவர்களின் கல்வி நலனை கவனத்தில் கொண்டே இவ்வறை அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 1லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இவ் நவீன வகுப்பறை அமைக்கப்பட்டுள்ளது. (33)

## -யாழ்.பல்கலை. வவுனியாவளாக-

# கல்விசாரா ஊழியர் பகிஷ்கரிப்புப்போராட்டம்

(வவுனியா)

யாழ்.பல்கலைக் கழகத்தின் வவுனியாவளாக கல்விசாரா உத்தியோகத்தர்களும் நிர்வாக உத்தியோகத்தர்களும் பணிப் பகிஷ்கரிப்பில் நேற்று முதல் ஈடுபட்டுள்ளனர். பூங்கா வீதியில் நிர்வாகத்திற்காக கட்டப்பட்ட கட்டடத்தினைத் தம்மோடு கலந்து ஆலோசிக்காது மாணவர்களுக்கு வழங்கியுள்ளனர். நிர்வாகத்திற்கு என்று மூன்று ஆண்டுகள் திட்டமிட்டுக் கட்டப்பட்ட கட்டடத்தினை மாணவர்களுக்கு கொடுத்தால் நிர்வாகத்தினைச் செய்ய முடியாமல் போகும் என்றும் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட சமயம் நிர்வாகத்திற்குச் சொந்தமான கட்டடத்திற்கு நிர்வாகம் போக வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் போராடினார்கள். எனினும் திடீர் என்று சில சக்திகளின் தூண்டுதல் காரணமாக இந்தக் கட்டடத்தைக் கோரியுள்ளனர். அதற்கு இசைந்து துணை வேந்தர் கட்டடத்தினை கொடுத்துள்ளார். எமது நிலையைப் பற்றி சற்றும் யோசிக்கத் தவறிவிட்டனர். தமது அடிப்படைப் பிரச்சினைகள் பல இருந்தும் நீண்டகாலமாக அவற்றைக் கருத்திற் கொள்ளாது பணியாற்றி வந்தோம் என்று தெரிவிக்கின்றனர். தமக்கு ஒரு தீர்க்கமான முடிவு கிடைக்கும் வரை இந்தப் போராட்டத்தில் தாம் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்

## -வவுனியா பாலமோட்டையில்-

# மனித உரிமைகள் குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வவுனியா பாலமோட்டைப் பிரதேச மக்களுக்கு மனித உரிமைகள் சம்பந்தமான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக கருத்தரங்கொன்று நடத்தப் படவுள்ளது.

வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனமும் டனீஸ் அகதிகள் பேரவையும் இணைந்து அண்மையில் இதை நடத்தியுள்ளனர்.

வவுனியா அபி[illegible]திப் புனர்வாழ்வு [illegible]றுவன[illegible]ணப்பாளர் க.இ[illegible]ரெத்தினம தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு டனிஸ் அகதிகள் பேரவை சார்பாக ஊர்மிலா, விஜிதா ஆகியோர் பங்குகொண்டனர்.

இக்கருத்தரங்கில் அடையாள அட்டையினைப் பெறுதல், இறப்பு அத்தாட்சிப் பத்திரம், பிறப் பத்தாட்சிப் பத்திரம், திருமணப் பதிவு எப்படிச் செய்வது மிக இலகுவாகப் பெறுவதற்குக் கையாளக்கூடிய வழிவகைகளை மக்களுக்கு விளங்கப்படுத்துவதாக இது அமைந்தது.

# பெண்ணுடன் சேஷ்டைவிட்டவர் பொலிஸில் ஒப்படைப்பு

(தென்மராட்சி)

இரவு மதுபோதையில் அத்துமீறி வீடொன்றிற்குள் நுழைந்து அங்கிருந்த பெண்ணுடன் சேஷ்டைவிட்ட நபர் அயல் வீட்டாரால் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் கச்சாய்ப்பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. (28)

# கூச்சல் குழப்பங்கள் மூலம் ஆட்சியைத் தக்கவைக்க முடியுமா?

"பாராளுமன்றம் முதற் தடவையாகக் கூடும் போது அதனைச் சம்பிரதாய பூர்வமாக சனாதிபதி ஆரம்பித்து வைப்பதே வழக்கம். ஆனால் பாராளுமன்றம் மூன்று தடவைகள் கூடி அமளி துமளியுடன் ஒத்திவைக்கப்பட்ட பின்னரும் சனாதிபதி பாராளுமன்றத்திற்கு வரவில்லை. மாறாக குழப்பம் விளைவிப்பதற்கென சிலரைத் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருக்கிறார்." இது குழப்பத்துடன் ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றக் கூட்டத்திற்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட அறிக்கையாகும். நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தொடர் பெரும் அமளிதுமளியில் முடிவுற்றது.

ஆளும் கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் அமர்வு பெரும்கூச்சல் குழப்பத்தில் இடைநிறுத்தி வைக்கப்பட்டது. சபாநாயகரின் அறிவிப்பினையடுத்து பெரும் சலசலப்பு ஏற்பட்டு ஒழுக்க நெறிமுறைகளை மீறி நடக்க முற்பட்டவேளை பெரும் வாக்குவாதம் உண்டானது. சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

இப்படியான செய்திகள் அண்மைக்காலங்களில் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வுகளின் முடிவில் ஊடகங்கள் மூலமாக வெளிவரும் செய்திகளாக இருந்து வருவது வழக்கமாகிவிட்டது.

பாராளுமன்றம் அதற்கென ஒரு கூட்டத்தொடர், தீர்மானம் நிறைவேற்றுதல் வாக்கெடுப்பு நடைபெறுதல் என்பன போன்ற விடயங்கள் எல்லாம் ஒரு சாதாரண விடயங்கள் அல்ல. ஒரு இறைமையுள்ள நாட்டில் ஒரு உயர்மட்ட நிர்வாக பீடமாகக் கருதப்படும் பாராளுமன்றமும் ஒரு உயர்மட்ட நிர்வாகசபை உறுப்பினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற நிலைமையிலேயே சிறுபிள்ளைத் தனமாகவும், மிகவும் கீழ்த்தரமான நிலையிலே பாராளுமன்றத்திலே உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் நிலைமையால் நாட்டுமக்கள் மத்தியிலே பெரும் சந்தேகங்கள் எழுவது மட்டுமன்றி பாராளுமன்றம் தொடர்பிலும் அதன் உறுப்பினர்கள் மத்தியிலும் பெரும்நம்பிக்கையீனம் ஏற்படுவதுடன் மக்கள் மத்தியிலே இருக்கின்ற பெருமதிப்பு குறைந்து போகின்ற நிலைமை உருவாகிவிட வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. ஏனெனில் சனநாயக மரபு தழுவிய பாராளுமன்ற முறையிலே மக்களால் மக்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்குச்சேவை செய்வதற்காக செயற்படும் சபையே பாராளுமன்றமாகும்.

இந்த மதிப்பும் பொறுப்பும் வாய்ந்த உயர்ந்த நிர்வாக சபையிலே உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பெரும் பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் சேவை செய்யும் கடப்பாடு வாய்ந்தவர்களாகவும் காணப்பட வேண்டிய இடத்தில் வெறும் கூச்சல்களும், குழப்பங்களும் விளைவிப்பது நாட்டுமக்கள் மனதிலே வருந்தத் தக்கதொன்றாகவே இருக்கும். ஒவ்வொரு பாராளுமன்றத் தேர்தலின்போதும் பலகோடி பெறுமதியான விலைகொடுத்தபடியே தெரிவுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு பலகோடி ரூபா நிதி இழப்புடன் மட்டும் பாராளுமன்றம் தெரிவுசெய்யப்படுவது இவ்வாறு கூடிக்கலைவதற்காகவும் கூச்சல் போடுவதற்காகவும் அல்ல. அதே வேளை இந்தப்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் கொடுப்பனவுகள் சலுகைகள் எனப் பெருமளவு நிதி செலவாகின்றது. ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வுக்கும் பல இலட்சம் ரூபா செலவாகிறது. இதனையெல்லாம் கருத்திற் கொள்ளாது பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு நடந்து கொள்வது மக்களை விசனமடைய வைக்கும். ஆகவே தேர்தல் காலங்களில் மக்கள் முன் மண்டியிட்டு வாக்குப்பிச்சை கேட்டு வருபவர்கள் உண்மையிலேயே ஊதாரிகளா? எனும் கேள்வியானது பாராளுமன்றத்திலே இவர்கள் செய்துவரும் ஊதாரித்தனமான நடத்தைகள் மூலம் எழுப்பப்படக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை பிரபல அரசியல் வாதிகளின் பின்னால் அதிலும்



குறிப்பாக பெரும்பான்மைச் சிங்கள அரசியல் வாதிகள் ஒவ்வொருவருக்கும் சண்டியர்கள் கூட்டம், பாதாள உலகக் கும்பல்களின் உதவிகள் தொடர்புகள் என்பன இருக்கவே செய்கின்றது. இவர்களின் வீராப்புக்களை தேர்தல் பிரச்சார காலங்களில் வெளிப்படையாக நோக்கமுடியும். அதாவது வாள்வெட்டு, கத்திக் குத்து, கொலை, கடத்தல், துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச்செல்லுதல் போன்றனவெல்லாம் சிறிலங்காவில் சாதாரணதொரு விடயமாகிவிட்டது. இவ்வாறு கிரிமினல் செயல்களில் ஈடுபடுபவர்களில் பலர் கள்ளவாக்குகள் மூலமும் மோசடிகள் மூலமும் பாராளுமன்றம் செல்லும் பட்சத்திலே அங்கே இவர்களின் அடாவடித்தனங்களும் அநாகரிகமான செயற்பாடுகளும் இடம்பெற மாட்டாது என்று எவ்வாறு சொல்ல முடியும்? அதனுடைய உச்ச அளவிலான வெளிப்பாடே நடந்துமுடிந்த 13ஆவது பாராளுமன்றின் நான்காவது அமர்விலே இடம்பெற்ற செயல்களெனக் கூறமுடியும். இது ஒரு புறமிருக்க 13ஆவது பாராளுமன்றம் கடந்த ஏனைய பாராளுமன்ற (அமர்வுகள்) நடைமுறைகளிலும் பார்க்கச்சற்று வேறுபட்டு இருக்கிறதை நாம் அவதானிக்கலாம். அதாவது,

1.ஒரு பெரும்பான்மையைக் கொண்டிராத ஆளும்கட்சி.

2.பிக்குகளைக் கணிசமாகக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்-அதற்கானதொரு கட்சி

3.எதிர்க்கட்சியைச் சேர்ந்த சபாநாயகர்.

4.சபாநாயகர் தெரிவு கடும் போட்டியும் 3முறை நடந்த வாக்கெடுப்பும்

5.பிக்குகளையே தாக்கி காயப்படுத்தும் அளவுக்கு அடாவடித்தனங்கள் இடம்பெற்றமை போன்றன.

வேறு படுத்திக் காட்டக்கூடிய 13ஆவது பாராளுமன்றின் மாறுபட்ட அம்சமாகக் கருதமுடியும்.

இம்முறை நடைபெற்ற அமர்வுகள் பெரும் குழப்பங்களில் முடிவடைவதற்கும் அமளி துமளி ஏற்படுவதற்கும் பிரதான காரணங்களில் ஒன்று ஆளும்கட்சி பலமான நிலையில் இல்லாதமையாகும். அதாவது சிறுபான்மை உறுப்பினர்களைக் கொண்டதாக ஆளும் கட்சி விளங்குவது பிரதான காரணமாகக் கொள்ளலாம்.

அதாவது எந்தநிலையிலும் பாராளுமன்றத்திலே 113 பாராளுமன்ற உறுப்பினர்களின் தேவையை உறுதி செய்யவேண்டிய அவசியம் ஆளும்கட்சிக்கு இருக்கிறது. இதனைப்பெற பல வழிகளிலும் முயற்சி மேற்கொண்டும் முயன்றும் ஆளும் சந்திரிகா கூட்டணியால் வெற்றிபெற முடியவில்லை. இந்த நிலைமையிலே நடைபெற்று முடிந்த 3பாராளுமன்றக் கூட்டங்களிலும் குழப்பமும், அமளிதுமளியும் ஏற்பட்டது. அதில் முதலாவது கூட்டத்தொடரும், மூன்றாவது கூட்டத்தொடரும் (4ஆவது அமர்வு) மிகவும் குழப்பம் நிறைந்ததாகக் காணப்பட்டது.

இங்கே தான் ஒன்றைக் கவனிக்க வேண்டும். 3முறை நடைபெற்ற கூட்டங்களிலும் குழப்பத்தைத் தொடக்கி வைத்தவர்கள் ஆளும் கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்களாகவே காணப்படுகின்றனர். இந்தநிலையை நோக்குவோமாயின் முதலாவது பாராளுமன்ற அமர்விலே சபாநாயகர் தெரிவுக்கான போட்டி நடந்தது. இதிலே இரகசிய வாக்கெடுப்பு நடத்தி பாராளுமன்றத்தின் சபாநாயகரைத் தெரிந்தெடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதிலே தாம் சபாநாயகரை வென்றெடுப்பதில் சிக்கலை எதிர்நோக்கிய ஆளும் கட்சியான ஐ.ம.சு.முன்னணி ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்குகள் இருவரைக்கடத்தி மறைத்து வைத்திருந்து சபாநாயகர் தெரிவு இடம்பெறும் போது பாராளுமன்றத்திலே கொண்டுவந்து முதற் கூட்டத்தில் நடந்த செயல். இரண்டாவது கூடிய பாராளுமன்றக் கூட்டத்திலேயே பிரதிச் சபாநாயகர் தெரிவின் போது ஏற்பட்ட சிறு அமளிதுமளி அதாவது ஆளும் தரப்பில் பிரதமர் சார்பான சில உறுப்பினர்கள் ஐ.தே.கட்சியுடன் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்தையடுத்து இணக்கமான நிலையிலே போட்டியின்றி ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களில் இருந்து பிரதி சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டார். இது ஜே.வி.பி.யினரைச் சீற்றம் கொள்ள வைத்தது. அவர்கள் எழுந்து சென்று பிரதமர் முன்னிலையிலே பல கேள்விகளை எழுப்பி அவரை குற்றம் சாட்டிப் பேசினர். இது ஆளும் தரப்பினரால் ஆரம்பித்துவைத்த இரண்டாவது குழப்பம்.

அடுத்து 3ஆவதாக நடைபெற்ற கூட்டத் தொடரே இங்கு அமளி துமளிக்கு எடுத்துக் கூறவேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது.

இராஜினாமாச் செய்திருந்த ஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்குவின் இடத்திற்குப் புதிய பிக்குவாக சத்தியப்பிரமாணம் செய்து வைப்பதற்காக அக்மீமன தயாரத்ன தேரர் சபாநாயகரால் அழைக்கப்பட்டார். அப்போது ஆளும் கட்சி பா. உறுப்பினரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயினால் கேள்வி ஒன்று எழுப்

**-ஸ்ரீபன்-**

பப்பட்டது. அதாவது நீதி மன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட இந்த விடயத்தை தற்போது ஒத்திவைக்க வேண்டும்என்பதாகக் கேட்டுக் கொண்டார். இதற்குப் பதில் அளித்த சபாநாயகர் இப்படியான ஒரு தடையுத்தரவு தமக்கு வரவில்லை என்று கூறி தேரரை அழைத்த போது ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கைகளை விட்டெழுந்து சபைநடுவே சென்று சத்தியப் பிரமாணம் செய்யப்போகின்ற தேரரை சூழ்ந்து கொண்டபோது அங்கே ஏற்பட்ட தர்க்கம் ஒரு தாக்குதலாக உருவெடுக்க இரு பிக்குகள் கடுமையாகத் தாக்கபட்ட அதேவேளை செங்கோலையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். அமளிதுமளியின் உச்சக்கட்டம் கேலிக்குரிய தாக்குதலாக முடிவடைந்தது. இத்துடன் சபையை 15 நிமிடம் வரை ஒத்திவைக்க வேண்டிய தேவையும் சபாநாயகருக்கு ஏற்பட கட்சித்தலைவர்களுடன் கூடிய கலந்துரையாடலையடுத்து பாராளுமன்ற நடவடிக்கைகள் வரும் யூலை மாதம் 20 ஆம் திகதி வரைக்கும் ஒத்திப் போடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்திலே குழப்பங்களை ஏற்படுத்தவென ஆளும் கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டுச் செய்துவரும் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் அவர்கள் சாதிக்கப் போவது என்ன? அல்லது குழப்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் எவ்வளவு காலத்துக்குத் தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக் காட்டும் தேவையில் இருந்து தப்ப முடியும்?

நிச்சயமாக நாட்டுமக்கள் மத்தியிலே இவர்களின் அடாவடித்தனங்களும் காட்டு மிராண்டித்தனமான செயல்களும் அதிருப்தியை உண்டு பண்ணியிருக்கும் என்பது மட்டும் உண்மை. அப்படியானால் ஆளும்கட்சி உறுப்பினர்கள் மீதும் அதன்அமைச்சர்கள் மீதும் எவ்வாறு நம்பிக்கை வைப்பார்கள்? இது ஒரு புறம்இருக்க ஆளும் கட்சியினரின் இத்தகைய வன்முறை அடாவடித்தன நடவடிக்கையினால் எதிர்க்கட்சிகள் மத்தியிலே ஒருவித மரியாதை உணர்வும் நம்பிக்கையும் மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. இது நிச்சயமாக வரும் அடுத்ததேர்தலில் பிரதிபலிக்குமா? என்பதும் தற்போது கூறமுடியாது உள்ளது. எனினும் மாற்றங்கள் நிகழவாய்ப்புண்டு.

எது எவ்வாறெனினும் ஆளும் தரப்பு உறுப்பினர்களினால் திட்டமிட்டு மேற்கொள்ளும் இந்த குழப்பகரமான நடவடிக்கைகள் தொடருவதற்கு இடமில்லை ஏனெனில் பலமான நிலையிலே இருக்கும் எதிர்க்கட்சிகள் இதற்கு ஓர் முற்றுப்புள்ளியை வைக்கவுள்ளதாகக் கூறியுள்ள வேளையில் அடுத்துவரும் பாராளுமன்ற கூட்டங்கள் முக்கியத்துவமிக்கவையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை ஆளும்கட்சி சிறுபான்மையாக இருந்தாலென்ன அல்லது எதிர்க்கட்சிகள் பலமான நிலையில் இருந்தாலென்ன பாராளுமன்றத்திலே கூச்சல்கள் போடுவதும் குழப்பங்கள் விளைவிப்பவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தகுதியை கொண்டிராதவர்களாகவே மக்களால் பார்க்கப்படுவர். ஏனெனில் நாட்டுமக்களின் ஓர் நம்பிக்கைக்குரிய உயர் நிர்வாகபீடமாக மதிப்பும் மரியாதையும் கொண்டிருக்கும் இடத்தை அவமதித்தல் மக்களால் ஏற்றுக் கொள்ளமுடியாத உண்மையாகும். "மக்கள் சபையை அமளிதுமளிப் படுத்தாமல் மக்கள் பிரதிநிதிகளாக நடந்து கொள்ளுங்கள்"என ஜாதிக ஹெல உறும யவின் தலைவரான வண.மேதானந்ததேரர் கூறியிருக்கிறார்.ஆனால் இவ்வாறான போதனைகளைக் கேட்கும் மனப்பாங்கில் குழப்பவாதிகள் உள்ளனரா? அப்படியானால் பிக்குகள் தாக்கப்பட்டிருக்க மாட்டார்களே!

நடைபெற்ற சம்பவங்களில் இருந்து மனம்நொந்து இனியாவது திருந்துவார்களா? திருந்துவார்களேயானால் நாட்டுக்கும் நலம் அல்லது "கெடுகுடி சொற்கேளாது" என்று நாட்டுமக்கள் கூறி நல்ல முடிவை எடுக்க வேண்டியவர்களாவர்.


யாழ்ப்பாணம்




ஜெயந்திரன்

# ஜாம்பவான்களின் எதிர்காலம்?

ஐரோப்பியக் கோப்பை கால்பந்து காலிறுதியில் தோற்க எந்த அணியும் விரும்பாது என்பது உண்மைதான். விளையாட்டுப் போட்டிகளில்



ரிக்காடோ

அனைத்து அணிகளும் வெற்றியைத் தான் விரும்பும் என்பதால் வெற்றி பெற்ற அணி குதூகலிப்பதும், தோல்வி அடைந்த அணி சோகத்துடன் வெளியேறுவதும் நாம் காணும் நிதர்சனமான உண்மை. ஆனால் கால் பந்து போட்டியில் பெனால்டியோ சூட்-அவுட்டோ ஒரு அணியின் வெற்றியை நிர்ணயிப்பதாக அமையாது. அதுவும் இங்கிலாந்து போர்த்துக்கல் அணி காட்டிய திறமை, கூடுதல் நேரத்தில் கூட 2 கோல்களை அவர்கள் அடித்தது அணிகளின் எழுச்சியையே வெளிப்படுத்தியது. சூட்-அவுட் ஒருவரை கீரோவாகவும் மற்றொருவரை வில்லனாகவும் காட்டிவிடும் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கல் கோல் காப்பாளர் ரிகார்டோ ஏற்கனவே பாராட்டு மழையில் நனையத் தொடங்கி விட்டார். இங்கிலாந்து அணியின் தலைவர் பெக்காமை இனி அனைத்துப் பத்திரிகைகளும் கிழி கிழி என்று கிழித்தே விமர்சிக்கும். ஆனால் மிகச் சிறந்த ஆட்டத்தை வழங்கியதற்காக இவ்விரு அணிகளுக்கும் நாம் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். ஆட்டத்தின் தொடக்கத்திலேயே நட்சத்திர வீரர் ரூனியை இங்கிலாந்து இழந்தது. அதுவும் ஒரு கோல் முன்னிலையில் இருந்த போது. ஆனால் இந்தப் போட்டியில் மிகவும் சிறப்பாக விளையாடிவரும் போர்த்துக்கல் அணிக்கு எதிராக தாம் அடித்த ஒரு கோல் போதாது என்பதை இங்கிலாந்து வீரர்கள் ஆட்டத்தின் போதே உணர்ந்திருந்தனர்.

ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன. அதன் பிறகு வழங்கப்பட்ட இரண்டாவது கூடுதல் நேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலை அடித்தன. இது இரு அணிகளும் கடுமையாகப் போராடின என்பதற்கு சிறந்த உதாரணமாகும். இங்கு குறிப்பிட வேண்டிய மற்றொரு முக்கிய அம்சம் இங்கிலாந்து வீரர்கள் 'அணியாக' விளையாடியது தான்.

அனைத்து வீரர்களும் மற்றவர்களுக்காக உயிரைக்கொடுக்க தயாராக இருந்தனர். அதனால் சூட்-அவுட் முறையில் தோற்றா லும் அதற்காக இங்கிலாந்து அவமானப்படத்தேவையில்லை இந்தப் போட்டி இங்கிலாந்து அணிக்கு ஒரு நல்ல பயிற்சியை தந்துள்ளது என்று கூறலாம். 2006 உலகக்கோப்பைப் போட்டியில் அது வெளிப்படும்.

இந்தப் போட்டியில் மிகவும் வருத்தப்படக்கூடிய விடயம் லீக் போட்டியில் வெற்றி பெற்றும் காலிறுதிக்கு இத்தாலி நுழையாது போனதுதான்.

பல்கேரியாவுக்கு எதிராகக் கடைசி நேர கோல் மூலம் வென்றாலும் துரதிர்ஷ்டவசமாக வெளியேற வேண்டியதாயிற்று.

D-பிரிவில் செக் குடியரசு அணியின் ஆட்டம் பிரமிக்கத்தக்கதாக இருந்தது. குறிப்பாக ஹொலண்டிற்கு எதிராக 0-2 என்ற கோல் கணக்கில் பின்தங்கியிருந்த செக் குடியரசு மிகச் சிறப்பாக விளையாடி 3-2 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றதும் காலிறுதிப் போட்டியில் டென்மார்க் அணிக்கு எதிராக அபாரமாக விளையாடி 3-0 என்ற கோல் எண்ணிக்கையில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியதும் செக் குடியரசு இப்போட்டித்தொடரில் தான் ஒரு வலுவான அணி என்பதை நிரூபிக்கப்போதுமானது.



இதேவேளை ஒரேயொரு கோலின் காரணமாக கால்பந்தாட்ட உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய பிரான்சின் காலிறுதிப் போட்டியிலான தோல்வி பிரான்ஸ் அணியை முழுமையான மாற்றத்திற்கு உட்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் அணியில் உலகத் தரம்வாய்ந்த சினடின்சிடான்.ரியரி ஹென்றி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இதேபோன்றுபல முன்னணி வீரர்களைக் கொண்ட அணிகள் இப்போட்டித் தொடரில்



ரூனி

சாம்பியன் கிண்ணத்தை சுவீகரிக்கும் என அனுமானிக்கப்பட்ட ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய அணி கள் காலிறுதி ஆட்டத்திற்குக் கூட தகுதி பெறாது வெளியேறியதும் இப்போட்டித் தொடரில் புதிய திருப்பமே.

இந்நிலையில் ஜாம்பவான் அணிகள் தமது தோல்விக்கு பல காரணங்களைக் கூறினாலும் புதிய அணிகள் தடைகளைத் தாண்டி அரையிறுதிக்குள் நுழைந்திருப்பது அவ் அணிகளின் கடின உழைப்பிற்குக் கிடைத்த ஊதியம் என்றால் மிகையில்லை.

ஜாம்பவான் அணிகளின் மேற்படி தோல்விகள் பாரிய பாதிப்பை ஏற்படுத்தாதுவிட்டாலும் கால்பந்தாட்டத்தின் தாய் போட்டியான உலகக்கிண்ண கால்பந்தாட்டத்தில் அதிக செல்வாக்குச் செலுத்தும் என்பது உறுதி.

---

# பிரான்ஸிற்கு விடை கொடுத்த கிரீஸ்

நடப்புச் சாம்பியன் பிரான்ஸை அதிர்ச்சித் தோல்விக்குள்ளாக்கி அரையிறுதி வாய்ப்பைப் பெற்றது ஒலிம்பிக் போட்டியை நடத்த உள்ள கிரீஸ்.போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற பரபரப்பான காலிறுதி ஆட்டத்தில் கிரீஸ் 1-0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸைச் சாய்த்து புதிய வரலாறு படைத்தது.



மகிழ்ச்சியில் கிரீஸ் அணி

ஐரோப்பிய கோப்பை கால்பந்து வரலாற்றில் இதற்கு முன்பு காலிறுதிச்சுற்றைக் கூட கிரீஸ் எட்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆட்டத்தின் 65-வது நிமிடத்தில் ஏஞ்சலாஸ் சாரிஸ்டஸ் தலையால் முட்டி போட்ட கோல், பிரான்ஸின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தியது.

சினடின் சிடான், ரியரி ஹென்றி ஆகிய நட்சத்திர வீரர்களைக் கொண்ட பிரான்ஸ் எதிரணி வீரர்களின் நற்காப்பில் இருந்து முன்னேற முடியவில்லை.கிரீஸின் முன்களத்தைநெருங்க பிரான்ஸ் வீரர்கள் பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இது இங்கிலாந்து,ஸ்பெயின்,இத்தாலி,ஜெர்மனி ஆகிய ஜாம்பவான்களைத் தொடர்ந்து பிரான்சும் வெளியேறக் காரணமானதுடன் ஐரோப்பிய கால்பந்து வட்டாரத்தில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது.எங்களது வீரர்களின் சகாசம் முடிவுக்கு வந்துள்ளது. மிகவும் நம்பிக்கையுடன் பயணித்த வீரர்களுக்கு இத் தோல்வி மிகப்பெரிய ஏமாற்றமாக அமைந்துள்ளது. பட்டத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியாதது வருத்தமளிக்கிறது என பிரான்ஸ் அணிப் பயிற்றுநர் ஜாக்கஸ் சாந்தினி வருத்தம் தெரிவித்தார்.முதல் பாதியிலேயே கோலடிக்கும் விதமான ஆட்டத்தை கிரீஸ் அணியினர் மேற்கொண்டனர். நாங்கள் பின்னடைவு பெற்றதும் முடிந்த அளவு வேகமான ஆட்டத்தை கடைப்பிடிக்க நிர்ப்பந்தித்தேன் என மேலும் கூறினார்.

2002 உலகக் கோப்பைப் போட்டியில் பிரான்ஸ் தோற்றதால் ரோஜர் லெமருக்குப் பதிலாக அணியின் பயிற்றுநராகப் பொறுப்பேற்றார். 52 வயதாகும் சாந்தினி.வெற்றி குறித்து கிரீஸ் அணி பயிற்சியாளர் தெரிவிக்கையில், வீரர்களின் திறமைக்கு கிடைத்த பரிசே இந்த வெற்றி என்றார்.

---

# முரளியில்லாத சிறிலங்கா அணி சாதிக்குமா?

உலகில் எந்தவொரு அணியும் அவுஸ்திரேலியாவுடன் விளையாட திறமைமிக்க வீரர்களை விலக்கிவிட்டுச் செல்வதில்லை. ஆயினும் சிறிலங்கா அணி தனது முக்கிய வீரரான முத்தையா முரளிதரன் இல்லாமல் சென்றிருக்கிறது. சிறிலங்கா அணி அவுஸ்திரேலியாவுடன் அதன் மண்ணில் மோதுவது இது நான்காவது முறையாகும்). இதற்கு முன்பு ஆடிய போட்டிகள் எதிலும் சிறிலங்கா வெற்றிபெறவில்லை.

1989-90 காலப்பகுதியில் நடைபெற்ற இருபோட்டிகளில் ஒன்றை வெற்றி தோல்வியற்றதாக முடித்தமையே சிறந்த பெறுபேறாகும். 1987-88ஆம் ஆண்டுகளில் 1-0 என்ற கணக்கில் தோற்றது. 1995-96 காலப்பகுதியில் போட்டியிட்ட மூன்று போட்டியிலும் படுதோல்வி கண்டது. கடைசியாக நடைபெற்ற அப்போட்டியில் சிறிலங்கா அடைந்த தோல்வியை ரசிகர்கள் இன்னும் மறந்திருக்க முடியாது. முதலாவது டெஸ்ட்போட்டியில் இனிங்ஸ் மற்றும் 36 ஓட்டங்களாலும் இரண்டாவது போட்டியில் 10 விக்கெட்டுக்களாலும் 3 ஆவது போட்டியில் 148 ஓட்டங்களாலும் தோல்வியடைந்தது. அதுமட்டுமன்றி அண்மையில் சிறிலங்காஅணி தனது மண்ணில் 3-0 என்ற கணக்கில் தோல்வியை சந்தித்தமை பெரும் தலைகுனிவாகும் ஒருநாள் போட்டிகளில் 3-2 என்ற வகையில் தோல்வி கண்டமையானது வெட்கத்திலும் வெட்கமானது.



அந்தப் போட்டிகள் சிறிலங்கா அணி சிம்பாப்வே சுற்றுப்பயணத்துக்குமுன்பு நடைபெற்றவையாகும். இந்தத் தோல்விகளை ஈடுசெய்யுமாப் போல் சிம் பாப்வே சென்று அவ்வணியுடன் போட்டியிட்டு வென்றுவந்தது. அதுவேறு விடயம். அந்த டெஸ்ட் போட்டிகள்பிரபல வெள்ளையின வீரர்களான ஹீத்ஸ்ரீக் போன்றோர் பங்கேற்காத போட்டிகளாகும் அது ஆளில்லாத வீட்டில் பானைகளை அடித்து நொருக்கிய கதை போன்றது. அந்தத் தொடரிலேயே உலக சாதனையாளரான முரளிதரன் 527 விக்கெட்டுக்களை நிறைவுசெய்து ஷேன் வோர்னைவிட 10 விக்கெட்டுக்கள் முன்னிலை வகிக்கிறார். ஆனால் இந்தத் தொடரில் முரளிதரன் பங்கேற்காததன் காரணமாக ஷேன் வோர்ன் முரளியின் சாதனையை இலகுவாக முறியடிப்பார். ஆனால் அவர் இத்தொடரில் பங்கேற்பது உறுதியாகாவிட்டால் மட்டுமே முரளியின் சாதனை தப்பித்துக்கொள்ளும் சிம்பாப்வே சுற்றுப்பயணத்தில் ஒருநாள் போட்டிகளில் மட்டுமே ஆடிய அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்காததாலும் ஷேன்வோர்ன் சாதனை முறியடிப்பை தவறவிட்டார். முரளிதரன் அவுஸ்திரேலிய பயணத்தை ரத்து செய்ததால் வோர்னுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இதற்குக் காரணம் உள்ளூர்ப் போட்டியொன்றில் அவருக்கு ஏற்பட்ட காயமே.

டெஸ்ட் போட்டியொன்றில் வீசப்படும் பந்துப் பரிமாற்றங்கள் (overs) 90 இல் 30,40 ஓவரை சளைக்காது வீசி விட்கெட்டுகளை கைப்பற்றும் முரளியின் வெற்றிடத்தைசிறிலங்காவின் எந்தவொரு பந்துவீச்சினாலும் ஈடுசெய்ய முடியுமா? அவுஸ்திரேலிய அணி வெளிநாடுகளில் டெஸ்ட் போட்டிகளில் தோல்வி கண்ட சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. ரிக்கி பொண்டிங் தலைமையிலான ஆஸி. அணியும் ஹேய்டன், கில்கிறிஸ்ட் லாங்கர் போன்ற துடுப்பாட்ட வீரர்களையும் மக்ராத் கிளெஸ்பி போன்ற பந்து வீச்சாளர்களையும் கொண்டிருக்கிறது. சிறிலங்கா அணியும் மாவன்,சனத்,மகேல,சங்கக்கார,வாஸ் போன்றோர் அணி திரண்டுள்ளதால் அவுஸ்திரேயாவின் சவாலுக்கு ஏற்றவகையில் முகம் கொடுப்பினும் முரளியில்லாது கௌரவமான தோல்வி ஒன்றையாவது ஈட்டிக் கொள்ளுமா என்பதே அனைவரதும்கேள்வியாகவுள்ளது.

வடிவேல்

# பாராளுமன்றில் பிக்குகள் மீதான தாக்குதலுக்கு நிதியமைச்சர் சரத்அமுனுகம மன்னிப்புக் கோரல்

## –பெரும்பான்மையை நிரூபிக்க உதவவும் கேட்டார்

**பாராளுமன்றத்தில் பிக்குகள் தாக்கப்பட்டமைக்கு சிறிலங்காவின் நிதியமைச்சர் சரத் அமுனுகம ஹெலஉறுமயவினரிடம் மன்னிப்புக் கோரியதாகவும் பாராளு மன்றத்தில் தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க உதவுமாறு கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

ஆளும் ஐ.ம.சு முன்னணியின் நிதியமைச்சர் தம்மை சந்தித்து பாராளுமன்றில் தாக்கப்பட்ட சம்ப வத்துக்கு மன்னிப்புக் கோரியதாக ஹெல உறுமய கட்சியின் செயலா ளரான உடுவே தம்மா லோக தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு யாவத்தையிலுள்ள கட்சித் தலைமைக் காரியாலயமான அசப்புவவில் நடைபெற்ற இச்சந்திப் பில் கட்சித்தலைவர் எல்லாவல மேதானந்த தேரர், பிரதித்தலைவர் ஓமல்பே சோபிததேரர், செயலர் உடுவே தம்மா லோக தேரர், பாரா ளுமன்ற குழுத்தலைவர் அத்துரா லிம் ரத்னதேரர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது ஆளும் கட்சியின் நிதிஅமைச்சர் அமுனுகம, அரசுக் கான பெரும்பான்மையை நிரூபிக்க ஹெலஉருமயவின் ஆதரவைக் கோரியதாகவும் அதற்கு அரசுமீது எதுவித நம்பிக்கையுமில்லாத போது எவ்வாறு ஆதரவளிக்க முடியும் என ஹெலஉறுமய கட்சியினர் வினாவெழுப்பியுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் இரு பிக்கு கள் தாக்கப்பட்டமை தொடர்பில் அரசு மௌனமாக இருப்பதால் அதன் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி மிகுந்த அவதானத்துடனிருப் பதாகவும் அதன் பின்னரே ஆதர வுவழங்குவது பற்றிச் சிந்திக்கலாம் என்றும் கட்சி உறுப்பினரான உடுவே தம்மா லோகதேரர் தெரிவித் துள்ளார்.

தாக்குதல் தொடர்பாக தனிப்பட்ட முறையில் அமுனுகம மன்னிப்புக் கோரியதையடுத்துப் பிக்குகளைப் பாதுகாப்போம் அதர்மவாதத்தை தோற்கடிப்போம் என்ற தொனிப் பொருளில் யூலை 5ஆம் திகதி களனியில் நடைபெறும் பூஜைக்கு சமூகமளிக்குமாறு அமுனுகமவிடம் ஹெலஉறுமய கேட்டுள்ளதாகவும் இதற்கு சனாதிபதியின் அனுமதி பெற்று வருவதாக அமுனுகம தெரிவித் துள்ளதாகவும் தேரர் தம்மாலோக தெரிவித்துள்ளார்.

# டிரோன் பெர்ணாண்டோவின் ஊடகச் செயலருக்கு மிரட்டல்

(கொழும்பு)

முன்னாள் ஐ.தே.கட்சியின் உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான டிரோன்பெர்ணாண்டோவின் ஊடகச் செயலாளர் சிசில் குணசேகரா இனந்தெரியாத குழுவொன்றினால் தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக கொலை அச்சுறுத்தல் விடுக்கும் தொடர்ச்சியான தொலைபேசி அழைப்புக்கள் தனக்குக் கிடைத்து வருவதாக தெரிவிக்கும் குணசேகரா இது குறித்து மௌண்ட் லவேனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# ஆயுதங்களுடன் பஸ்நிலையத்தில் நின்ற மூவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

ஆயுதங்களுடன் மூன்று நபர் கள் பொலிசாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

சிறிலங்காவின் செவனகல பகுதியில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்றில் ரீ-56ரக துப்பாக்கி மற்றும் கிரனைட் என்பவற்றுடன் நின்ற மூன்று பேருமே செவனகலப் பொலி சாரால் கைது செய்யப்பட்டனர்.

இம் மூன்று நபர்களும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் பல கொள்ளைகள் கொலை களில் சம்பந்தப் பட்டவர்கள் என்றும தெரிவிக்கும் பொலிசார் குறித்த ஆயுதங்கள் மாளிகாவத்தை பாதாள உலகக் குழுவொன்றிடமிருந்து வாங் கப்பட்டவை என்றும் கூறியுள்ளனர்.

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் நீக்கக் கோரும் மனுவில் பிரதிவாதிகளின் பெயரை மாற்ற நீதி மன்றம் அனுமதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் கடந்த அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை இரத்துச் செய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த பிரதி வாதிகளை மாற்றுவதற்கு மேல் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இந்தமனு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டமையினால் அப்போது ஆட்சியிலிருந்த கடந்த அரசாங் கத்தின் பிரதமரும், அமைச்சரவை யும் பிரதிவாதிகளாக அப்போது குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இதேவேளை தற்போது ஆட்சி மாறியுள்ளமையியால் அந்த வழக்கின் பிரதிவாதியாகத் தற் போதைய அரசின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் அவரது அமைச் சரவையையும் பிரதிவாதிகளாக மாற்றுவதற்கானமனு மேல் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை அடுத்து பிரதிவாதி யாக தற்போதைய பிரதமரையும் அவரது அமைச்சரவையையும் மாற்றுவதற்கு நீதிமன்றம் அனும தியளித்ததையடுத்து பிரதிவாதி யாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் அவரது அமைச்சரவையும் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களும் சிறிலங் காவின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன் படிக்கையை இரத்துச்செய்யக் கோரி தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் யூலை 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண ஆகியோரின் சார்பிலும்.

சிஹல உறுமயக் கட்சி, சிங்கள ஜாதிக சங்கமய ஆகியவற்றின் சார்பிலும் புரிந்துணர்வு உடன்படிக் கையை இரத்துச் செய்யுமாறு கோரி மனுத்தாக்கல் செய்யப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# 3500 பொலிசாருக்கு விரைவில் பதவி உயர்வு

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 3500க்கும் அதிகமான ரொபலிசாருக்கு விரைவில் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் தேசிய பொலிஸ் ஆணையாளர் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள பதவி நிலையிலிருந்து அடுத்த பதவி நிலைக்கு 1600 சப் இன்ஸ்பெக்ரர்களும் 1900 சார்ஜன்ட் தரத்தைச் சேர்ந்தவர்களும் ஆண் பெண் இரு பாலாருமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் இப்பதவி உயர்வுகளைப் பெறுவார்கள்.

# தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு

மாகாண சபை தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் அதிக ரித்துச்செல்வதாக சிறிலங்காப் பொலிஸ்த்தரப்பின் தகவல்கள் கூறுகின்றன. இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் 142 சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 118 சம்பவங்கள் தேர்தல் அத்து மீறல்களாகும். மேல் மாகாணம், தென்மாகாணம் போன்ற இடங்க ளிலேயே அதிகளவான வன் முறைச் சம்பவங்கள் இடம்பெற் றுள்ளன இதேவேளைமாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி நடை பெறவுள்ளமை தெரிந்ததே.


## காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்

## பணிநிலை வெற்றிடம்

பணிநிலை 01. மொழி பெயர்ப்பாளர்:-
ஆங்கிலம் → தமிழ் - 03
ஜேர்மனி → தமிழ் - 01

பணிநிலை 02. மின் ஒட்டுனர்:-
[வெல்டர்] - 01

பணிநிலை 03. மருத்துவ உதவியாளர்:- 02

பணிநிலை 04. சாரதி:- 02

பணிநிலை 05. தமிழ் ஆசிரியர்:- 01
[ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை]

பணிநிலை 06. இலத்திரனியலாளர்கள்:- 05

பணிநிலை 07. கடலகவளவாளர்கள்:- 05

க.பொ.த.[சா/த] கல்வித்தகைமையும்
அதற்கு மேற்பட்ட கல்வித்தகைமையுடையோரும்

குறிப்பு:- நேர்முகத்தேர்வு 02.07.2004 (வெள்ளி) காலை 9.00
இடம்:- காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர்இல்லம்.
கைவேலி, புதுக்குடியிருப்பு.
தகைமைச்சான்றிதழ்களுடன் மேற்குறித்த நாளில் சமூகமளிக்கவும்.

நிர்வாகச் செயலகம்,
காந்தரூபன் அறிவுச்சோலை.

(4755)



## 03 ஆம் ஆண்டுநினைவலைகள்

தோற்றம்
02
02
1966



வீரச்சாவு
29
06
2001

கடற்புலிகளின் தளபதி

**லெப்.கேணல் கங்கைஅமரன்**

**அந்தோனி ஜோன்சன்**

கரிகாலன் அணியினிலே உயிர் கொடுத்த
உத்தம வீரனே
களம் பல கண்ட கடற்புலி அணியிலே
வந்துதித்த தளபதியே
களமாடிப் பகை அழிக்கவென வந்த
வீர மறவனே
உங்கள் வீரப்புகழ்தனை வடிக்க முடியாது
அன்பும் உங்கள் நெஞ்சில் ஆழமாயிருக்கும்
அழியாத நின்புகழ் என்றும் நிலைக்கும்
அறிவியலை உங்கள் உள்ளம் வாரியிறைக்கும்
அழியாது எம் நெஞ்சில் உங்கள் பெயரிருக்கும்

இவருடன் வீரச்சாவடைந்த மேஜர் தசாதரன் (தசா) அவர் களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மனைவி, மகன்,மகள்
உற்றார்,உறவினர்,
நண்பர்கள்,போராளிகள்.

(4666)

# ஐ.நா.பாதுகாப்புச்சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வழங்க சீனா ஆதரவளிக்கும்

## சீன வெளியுறவுத்துறை அதிகாரி தெரிவிப்பு

(பீஜிங்)

**ஐக்கிய நாடுகள் பாகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாக இடம்பெற சீனா முதல் முறையாக ஆதரவு தெரிவித்துள்ளது. இத்தகவலை சீன வெளியுறவுத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.**

ஐ.நா சபையின் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா உட்பட ஐந்து நாடு கள் நிரந்தர உறுப்பினராக இருக் கின்றன.

இதனை விரிவுபடுத்தி சில புதிய நாடுகளையும் சேர்க்க வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது. இதன டிப்படையில் பாதுகாப்புச் சபையில் புதிய நாடுகள் சேர்க்கப்பட்டால் இந்தியா இடம்பெற வேண்டும் என்று பல நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

இது பற்றி ஐ.நா.பாகாப்புச் சபையில் முக்கிய பங்கு வகிக்கும் சீனா வாய்திறக்காமலேயே இருந்து வந்தது.

இந்த நிலையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்க சீனா முதல் முறையாக ஆதரவு தெரிவித்துள்ளது. இது பற்றி சீன வெளியுறவு அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்:

உலக அளவிலும் பிராந்திய அளவிலும் இந்தியாவின் செல்வாக்கைச் சீன அரசாங்கம் நன்றாகப் புரிந்து வைத்துள்ளது.

எனவே ஐ.நா.சபையில் இந்தியாவின் பங்கு அவசியம் என்று கருதுகின்றோம்.

ஐ.நா.பாதுகாப்பு சபையை மாற்றி அமைக்கும் திட்டம் அவசியம் தேவை என்றால் அதனை ஆதரிப்போம். ஆனால் அதில் இடம்பெற எந்த நாட்டை ஆதரிப்பது என்பது பற்றி இன்னும் முடிவுசெய்யவில்லை. இவ்வாறு அவ்வதிகாரி கூறியுள்ளார்.

# இந்திய சஞ்சிகைச் செய்திக்கு பாக்.வெளிநாட்டு அமைச்சு மறுப்பு

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர்இந்தியாவிற்கு ஒரு தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலாக இலங்கை விளங்கும் என்று கூறியதாக ஒரு செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டதை பாகிஸ்தானிய வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சு கடுமையாக மறுத்துள்ளது. ஒரு இந்திய சஞ்சிகையான அவுட்லுக் இந்தியா என்ற சஞ்சிகையின் 'தெயமான் இன் கொழும்பு' என்ற தலைப்பில் பி.ராமனினால் வெளியிடப்பட்ட கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது. இச்செய்தியானது நிரூபிக்கப்படாத உண்மைக்குப் புறம்பான செய்தியென பாகிஸ்தானிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக் கடுமையாக மறுத்துள்ளது.

# எதிர்க்கட்சிகளுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கும் அரசியல் கலாச்சாரம் தேவை

## சனநாயக ஐக்கிய முன்னணி செயலர்

ஆட்சி அதிகாரத்தில் எதிர்க் கட்சிகளுக்கும் அதிகாரப்பங்கு வழங்கப்படும். அரசியல் கலாச் சாரம் ஒன்றை நாட்டில் உருவாக்க வேண்டும் என சனநாயக ஐக்கிய முன்னணி கேட்டுள்ளது. கட்சியின் செயலர் ஹாபிஸ் நசீர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். நாட்டின் இன்றைய சூழ்நிலையில் இவ்வாறான அணுகுமுறை ஒன்றே பொருத்தமானதாக இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மேல் மாகாணசபைத் தேர்தல் பிரச்சார மேடை ஒன்றில் உரையாற்றிய அவர் பல்லின மக்களும் வாழும் இந்த நாட்டில் புதிய அரசியல் கலாச்சாரம் ஒன்றின் அவசியம் அவசரமான தாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

# தனியார் பேருந்துகளே பெரும்பாலும் விபத்துக்குக் காரணமாகின்றன

## போக்குவரத்து ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தனியார் பேருந்துகளே எண்பது வீதமான விபத்துக் களுக்கு காரணமாகின்றன என சிறிலங்காவின் தேசிய போக்கு வரத்து ஆணைக் குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

அனேக தனியார் பஸ் உரிமையாளர்கள் சாரதிப்பயிற்சியை ஒழுங்காகப் பெறாத சாரதிகளை சேர்த்துக் கொள்கின்றனர்." என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றால் மலையகத்தில் பல்கலைக்கழகம்

## – முன்னாள் மாகாணக்கல்வி அமைச்சர் ராதாகிருஷ்ணன்

(கொழும்பு)

எதிர்வரும் மத்திய மாகாணசபைத் தேர்தலில் தாம் மீண்டும் வெற்றிபெற்றால் மலையகத்துக்கான தனியான பல்கலைக்கழகம் அமைக்க முயற்சிகள் எடுக்கப்படும் என முன்னாள் மத்திய மாகாண கல்வி அமைச்சரும், மாகாண சபையின் நுவரெலிய வேட்பாளருமான வீ.ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். கொத்மலை பகுதியில் இடம்பெற்ற பிரச்சார நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், மலையகத்தில் பாடசாலைகள் உரிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டமை காரணமாகவே வருடா வருடம் மலையகத்தில் இருந்து பல்கலைக்கழக அனுமதிகள் உயர்ந்து வருகின்றன. எனச் சுட்டிக்காட்டினார்.

# குழந்தைகளின் விற்பனையை தடுக்க இந்தியா திட்டம்

(காத்மண்டு)

நேபாளத்தில் இருந்து குழந்தைகள் மற்றும் பெண்களைக் கொண்டு வந்து விற்பதற்குத் தடை விதிக்கும் முக்கிய திட்டத்தை அமுல்படுத்த இந்தியா முடிவெடுக்கிறது. நேபாளத்திற்கான இந்தியாவின் தூதர் சியாம்சன் இதனைத் தெரிவித்திருக்கிறார்.



திருப்புவனம் அருகே நடந்த பஸ் லாரி பயங்கர மோதலில் விபத்துக்குள்ளான பஸ் மற்றும் லாரி அப்பளம் போல நொருங்கி கிடப்பதை காணலாம்.



அகில இந்திய லாட்டரி வர்த்தக மற்றும் உபதொழில்கள் கூட்டமைப்பு மற்றும் தமிழக லாட்டரி வியாபாரிகள் சங்கம் இணைந்து நடத்திய லாட்டரி கோரிக்கை மாநாட்டில் பங்கேற்ற நிர்வாகிகள் கரம் கோர்த்து நின்ற காட்சி.

# சிறில. புதிய காவல்துறை மா அதிபராக ஜயதிஸ்ஸ ஹேரத் நியமனமாவார்

சிறிலங்காவின் புதிய காவல் துறை மா அதிபராக ஜயதிஸ்ஸ ஹேரத் நியமனம் பெறவுள்ளார். தற்போதைய காவல்துறை மா அதிபர் இந்திரா டி சில்வா இன்னும் இரண்டு மாதங்களில் ஓய்வு பெறவுள்ளார். சிரேஷ்ட காவல் துறை அதிபர் ஜயதிஸ்ஸ ஹேரத்தின் பதவிக்காலம் எதிர்வரும் 12 ஆம் திகதி முடிவடைகிறது. இந்த நிலையில் ஜயதிஸ்ஸ ஹேரத்தின் பதவிக்காலத்தை நீடித்து அவருக்கு காவல்துறை மாஅதிபர் நியமனத்தை சிறிலங்காவில் வழங்குவதற்கு சனாதிபதி ஆலோசித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# தேர்தலில் வெற்றியைப் பெற்றுத்தரும் பொறுப்பு அமைச்சர்கள்,பிரதி அமைச்சர்களையே சாரும்

## சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தமது ஐ.ம.சு. முன்னணிக்கு வெற்றி வாய்ப்பைப் பெற்றுத்தரும் பொறுப்பு அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் சாரும் என சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.இத்தேர்தலுக்காக 15 மாவட் டங்களில் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ள மேற்படி அமைச்சர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார் கள். எனினும் இவர்கள் அங்கு பிரச்சாரப் பணிகளில் ஈடுபடாமல் கொழும்பில் சுகத்தை அனுப விப்பதாக தமக்குத் தகவல் கிடைத்ததையடுத்து சந்திரிகா இவ்வாறு தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.




வீரவணக்கம்

06ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



கொக்கட்டிச்சோலைப் பகுதியில் சிறிலங்கா
இராணுவமும், தேசவிரோத சக்திகளும் இணைந்து
நடாத்திய சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட
நேரடி மோதலில் 29.06.1998 அன்று வீரச்சாவடைந்தனர்

தாயின் மடியில் 09-10-1971 தாயக மண்ணில் 29.06.1998

தமிழீழ காவல்துறை பரிசோதகர் கார்த்தியாயினி
(தேவராசா கார்த்தியாயினி)
கொக்குவில் மேற்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

தாயின் மடியில் 23-10-1975 தாயக மண்ணில் 29-06-1998

தமிழீழ காவல்துறை தலைமைக்காவலர் கீதா
(மாயகிருஸ்ணன் கீதா)
அல்வாய் மேற்கு, அல்வாய்
யாழ்ப்பாணம்.

இம்மாவீரர்களுக்கும் அன்றைய தினம் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும்
எமது வீர வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறையினர்"

(4753)

ஐரோப்பிய கால்பந்து போட்டித் தொடர்

# டென்மார்க் அணியை வீழ்த்திய செக்.அணி

# அரையிறுதி போட்டிக்குத் தகுதிபெற்றது

யூரோ 2004 கால்பந்தாட்ட சுற்று போட்டியின் நான்காவது அரையிறுதிக்கான வாய்ப்பை செக்குடியரசு தனதாக்கியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கால் இறுதி ஆட்டத்தில் 3-0 என்ற கோல் எண்ணிக்கையில் டென்மார்க் அணியைத் தோற்கடித்து செக்



அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

இதன்படி போர்த்துக்கல், கிரிஸ், நெதர்லாந்து, செக்குடியரசு அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளன.

முதலாவது அரையிறுதிப் போட்டி நாளை போர்த்துக்கல் நெதர்லாந்து அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் செக்குடியரசு அணி கிரீஸ் அணியை நாளை மறுதினம் எதிர்கொள்கின்றது.

செக்குடியரசு அணிக்கும் டென்மார்க் அணிக்கும் இடையிலான



கால் இறுதி போட்டி போர்த்துக்கல்லின் போட்டோ நகரில் நடைபெற்றது.

இந்தப் போட்டியை 41 ஆயிரத்து 92 பேர் அரங்கில் நேரடியாக கண்டுகளித்தனர்.

குழு 4 D யில் ஜேர்மனி, லத்வியா, நெதர்லாந்து அணிகளுக்கு எதிராக வெற்றிகளைக் குவித்து முதலிடம் பெற்றிருந்த செக்குடியரசு அணி கால் இறுதிக்குத் தகுதி பெற்ற முதலாவது அணி என்ற உட்சாகத்துடன் இந்தப் போட்டியில் களமிறங்கியது.




குழு Cயில் இரண்டாம் இடத்தை பெற்றிருந்த டென்மார்க் அணி இந்த போட்டியின் முதல் பாதியில் செக்குடியரசு அணிக்குசவாலாக விளங்கியது. இடைவேளையின் போது இரு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை.

எனினும் இடைவேளையின் பின்னர் நான்காவது நிமிடத்தில் கால் டொபஸ்ரி அடித்த கோணரை அபாரமாக தலையால் தட்டி ஜான் பொலர் கோல் ஒன்றைப் போட்டு செக் அணியை முன்னிலையில் நிறுத்தினார்.



இதனை அடுத்து போட்டியின் ஆட்ட வேகத்தை அதிகரித்து விளையாடிய செக் அணி டென்மார்க் கோல் வாயிலை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தது.

போட்டியின் 63 ஆவது நிமிடத்தில் மிலான் பரோஸ் அலாதியான முறையில் டென்மார்க் கோல் காப்பாளர் ரொரன்கானுக்கு மேலால் பந்தை அடித்து செக் அணிக்கு இரண்டாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். இரண்டுநிமிட இடைவேளையின் பின்னர் செக்குடியரசு அணித்தலைவர் பவல் நெட்வோட் பரிமாறியபந்தை அபாரமான முறையில் மிலான் பரோஸ் கோலாக மாற்றி செக்குடியரசின் இலகுவான வெற்றிக்கு வழியமைத்தார்.




# அதிக கோல்களைப் பெற்றவராக செக்குடியரசின் மிலான்பரோஸ்



டென்மார்க் அணிக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் இரண்டு கோல்களை அடித்த செக்குடியரசின் மிலான் பரோஸ் அதிக கோல்களைப் பெற்றவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இந்த போட்டியில் சிறப்பாக பிரகாசித்த இவர் போட்டியின் 63,65ஆவது நிமிடங்களில் இரண்டு கோல்களைப் போட்டு டென்மார்க்கை அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் செக்குடியரசின் இலகுவான வெற்றிக்கும் வழி வகுத்தார்.

# குட்டிக்கரணம் போட்டாவது ஜெயிப்பேன் என்கிறார் ரோஜர் பெடரர்!



விம்பிள்டன் டென்னிஸில் நடப்புச்சம்பியன் ரோஜர் பெடரர் 4-ஆவது சுற்றுக்கு முன் னேறியுள்ளார். ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் அவர் 6-3,6-4,6-3, என்ற செட்களில் சுவீடன் வீரர் தாமஸ் ஜோகன்சனைத் தோற்கடித்தார். சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பெடரர் புல்தரை ஆட்டங்களில் தொடர்ந்து பெறும் 20-ஆவது வெற்றி இது. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மகளிருக்கான ஆட்டத்தில் அமெரிக்காவின் ஜெனிபர் காப்பியாட்டி 7-5,6-1 என்ற நேர் செட்களில் பிரான்ஸ் வீராங்கனை நதாலி டெஸியைத் தோற்கடித்து நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு ஆட்டத்தில் ரஷியாவைச் சேர்ந்த நரியா பெட்ரோவா 7-6, 6-2 என்ற செட்களில் உக்ரைன் வீராங்கனை தாதியானாவின் 4ஆவது சுற்று முயற்சியைத் தடுத்தார். வழக்கமாக விம்பிள்டனில் ஞாயிற்றுக்கிழமை ஆட்டங்கள் நடத்தப்படுவது கிடையாது தொடர்மழையால் சனிக்கிழமை உட்பட2 தினங்கள் முற்றிலும் ஆட்டங்கள் தடைப்பட்டதால் அவற்றை சரிக்கட்ட ஞாயிற்றுக்கிழமை ஆட்டங்கள் நடத்தப்பட்டன. விம்பிள்டன் வரலாற்றில் இம் மாதிரி ஞாயிற்றுக்கிழமை ஆட்டங்கள் நடத்தப்படுவது இது முன்றாவது முறை.

விம்பிள்டன் டென்னிஸ்போட்டித் தொடர்

# முன்னணி வீரர்கள் நான்காவது சுற்றுக்கு இரட்டையர் போட்டியில் இந்திய ஜோடிக்கு வெற்றி


லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் பிரிவில் உலகின் முன்னனி ஆட்டக்காரரான ரோஜர் பெரடர், அன்டி ரொடிக், ரின் கென்மன் ஆகியோர் நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் நடை பெற்ற மூன்றாவது சுற்றுப்போட்டியில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெரடர் சுவீடனின் தோமஸ் ஜோன்சனையும் அன்ரிரொடிக் சகநாட்டவரான டெயிலர் கெண்டையும் பிரிட்டனின் ரின் கென்மன் மொறோக்கோவின் மராட்டியையும் தோற்கடித்து நான்காவது சுற்றுக்கு முன்னேறினர்.

மகளிர் பிரிவில் ஜெனிபர் ஹெப்ரியாட்டி, செரினாவில்லியம் ஆகியோர் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினர்

இரட்டையர் போட்டியில் இந்தியாவின் மகேஸ் பூபதி பெலரசின் மாக் நிர்மி இணை நெதர்லாந்தின் றேமன், மாட்டின்இணையை தோற்கடித்தது.

# அரையிறுதியில் இந்தியா விளையாடும் தன்ராஜ் பிள்ளை



எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்திய ஹொக்கி அணி அரையிறுதியில் விளையாடும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்தியாவின் நட்சத்திர வீரர் தன்ராஜ்பிள்ளை 36 வயதாகும் அவர் 4 ஆவது முறையாக ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பெறுவேன் எனவும் உறுதி தெரிவித்துள்ளார். முதற் கட்டமாக அறிவிக்கப்பட்ட இந்திய உத்தேச அணியில் தன்ராஜ் பிள்ளை இடம்பெறவில்லை. இந்நிலையில் முன்னாள் வீரர்கள், ரசிகர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவரை உடனடியாக அணியில் சேர்த்தது ஹொக்கி சம்மேளனம். தற்போது அமெரிக்கா உட்படப் பல்வேறு வெளிநாடுகளில் பயிற்சி ஆட்டங்களில் இந்திய உத்தேச அணியினர் விளையாடி வருகின்றனர். இந்நிலையில் பி.பி.சி. விளையாட்டு வார இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் தன்ராஜ் பிள்ளை கூறியுள்ளதாவது, எவ்வளவு காலம் உடற்தகுதியுடன் இருக்கிறேனோ அதுவரை விளையாடுவேன். ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வாகும் நம்பிக்கை எனக்கு உள்ளது. 100 சதவீதம் தகுதியுடன் உள்ளேன். அமெரிக்காவில் மேற்கொண்ட பயிற்சி புதுவிதமான உத்வேகத்தை அளித்துள்ளது. அங்கு பெற்ற பயிற்சி மூலம் உடற்திறன் கூடியுள்ளது. எனது வேகமும் அதிகரித்துள்ளது. ஏதென்ஸில் நடைபெற உள்ள ஒலிம்பிக்கில் இந்தியா நிச்சயம் அரையிறுதிச் சுற்றில் விளையாடும். கடந்த 2 ஒலிம்பிக்கிலும் பதக்கத்துக்கு அருகில் வந்தும் வெற்றி காணமுடியவில்லை. அவ்வளவு அனுபவம் வாய்ந்த இந்திய அணி இம்முறையும் சிறப்பாக விளையாடும் என நம்பு கிறேன். இந்த ஒலிம்பிக்கில் அதி சிறப்பாக விளையாடி பதக்கம் வெ[illegible]வதே எங்களது பிரதான நோக்கம் என்றார் அவ[illegible].

# நிருபர்களிடம் பேசுவதற்கு பாக். வீரர்களுக்குத் தடை

பத்திரிகை, தொலைக்காட்சி நிருபர்களிடம் பேசுவதற்கு வீரர்களுக்குத் தடை விதித்துள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இன்சமாம் உல் ஹக் உட்பட ஆசியக் கோப்பைப் போட்டிக்காக பயிற்ச்சி முகாமிலுள்ள 25 பேரும் யாரிடமும் பேசக் கூடாதென நிர்ப்பந்தம் விதித்துள்ளதாக உள்ளூர் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. ஊடகங்களுடனான தொடர்பைப் புதிய பயிற்றுநர் பாப்வூல்மர் கவனித்துக் கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

–மும்முனை ஒருநாள் கிரிக்கெட் தொடர்–

# கிறிஸ்கெய்லின் சிறப்பு துடுப்பாட்டத்தால் மேற்கிந்தியத் தீவுக்கு 7 விக்கெட்டால் வெற்றி




இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 7விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து அணிகள் கலந்து கொள்ளும் மும்முனை கிரிக்கெட் போட்டி தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் கிறின் பிரிட்சில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து மேற்கிந்திய அணிகள் மோதின.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 38.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இங்கிலாந்து அணிசார்பாக துடுப்பாட்டத்தில் அன்ரூஸ்ரோஸ் 43 ஓட்டங்களையும் ஜோன் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

மார்கஸ் ரெஸ்கொதிக், மைக்கல்வோன், போல்கொலிங்வூட், அன்ரனிமெக்ரா, இயன்கஸ்பல் ஆகிய முன்னணி வீரர்கள் பத்துக்கும் குறைவான ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் பிறேவோ 3விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலெடுத்து ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 32.2ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்டவீரர் கிரிஸ்கெய்ல் அதிரடியாக ஆடி 60 ஓட்டங்களையும், லாறா32 ஓட்டங்களையும் பெற்று வெற்றியை உறுதி செய்தனர்.இந்தமும்முனைச் சுற்றுப் போட்டியின் அடுத்த போட்டி இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் இன்று பகல் இரவாக நடை பெறவுள்ளது. முதலிரு போட்டிகள் மழை காரணமாக தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பியக் கோப்பை கால்பந்து 30 ஆம் திகதி முதல் அரையிறுதி ஆட்டம்

கடந்த 2 வார காலமாக நடைபெற்றுவரும் ஐரோப்பியக் கோப்பை கால்பந்தாட்டம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. நடப்புச் சம்பியன் பிரான்ஸ், இங்கிலாந்து ஸ்பெயின்ஸ், இத்தாலி, ஜெர்மனி ஆகிய ஜாம்பவான் அணிகள் மண்ணைக் கௌவ்வி வெளியேறிவிட்டன.

இந்நிலையில் லிஸ்பனில் வரும் புதன்கிழமை நள்ளிரவு 12.10 மணிக்கு தொடங்கும் முதல் அரையிறுதி ஆட்டத்தில் நெதர்லாந்துடன் போட்டியை நடத்தும் போர்த்துக்கல் மோதுகிறது. அரையிறுதிக்கு முன்னேறிப் புதிய வரலாறு படைத்துள்ள கிரிசுடன், செக்குடியரசு மோதுகிறது. இந்த ஆட்டம் போர்டோவில் வரும் வியாழக்கிழமை நள்ளிரவு 12.10 மணிக்குத் தொடங்குகிறது.


வடக்கு–கிழக்கு மாவட்ட கால்பந்து போட்டி

# யாழ். அணியை வீழ்த்திய மட்டு.அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட அணிகள் கலந்துகொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் மட்டு.மாவட்ட அணி யாழ். மாவட்ட அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

நேற்று மாலை 4 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியிலேயே மட்டு. அணி சம்பியன் பட்டத்தை வென்றது. நலீம், நிஜாப்தீன் ஆகியோர் கோல்களைப் போட்டனர். இப்போட்டியில் இருந்து தெரிவு செய்யப்படும் அணி பதுளையில் நடை பெறவுள்ள 30ஆவது மத்திய விளையாட்டு விழாவில் பங்கேற்கும் என தெரிவிக்கப்படுகிறது. மேற்படி போட்டி கடந்த 26ஆம் திகதி முதல் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (மி)

## சிந்தனைக்கு



எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்யமுடியாது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29-06-2004


தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham 23ela@yahoo.com


## மூன்றாவது தரப்பு!

கருணாவைப் பாதுகாத்ததில் எந்வொரு இராணுவத்தினருக்கும் தொடர்பு இல்லை என்ற சிறிலங்காவின் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் பலகல்ல தெரிவித்தமை சிறிலங்கா இராணுவத்தில் மூன்றாவது தரப்பும் ஒன்று உண்டா? என்ற கேள்வியை எழுப்புவதாக உள்ளது. அதாவது இராணுவத்தளபதிக்குத் தெரியாமல் இராணுவத்திற்குள் செயற்படும் அணி ஒன்றுண்டா? எனக் கேட்க வைக்கிறது. ஏனெனில் கருணாவைப் பாதுகாத்ததில் இராணுவத்தில் சிலர் உதவியிருக்கலாம். ஆனால் இதில் அரசிற்குச் சம்பந்தம் இல்லையென ஊடகத் தகவல்த்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளநிலையில் இராணுவத்தளபதியின் இதற்கு மாறான கூற்றுக்களே மேற்கூறப்பட்ட கேள்வியை எழவைத்துள்ளது.

கருணா கொழும்பிற்கு அழைத்துவரப்பட்டமைக்கும் இராணுவத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. கருணாவின் பாதுகாப்பிற்கும் இராணுவத்திற்கும் எந்தத்தொடர்பும் இல்லையெனக் கூறுவது சிறுபிள்ளைத்தனமானது மட்டுமல்ல, சிறிலங்கா இராணுவத்திற்கோ அதன் புலனாய்வுத்துறைக்கோ அவமானகரமானதாகும்

ஏனெனில் சிறிலங்கா இராணுவம் கருணாவிற்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை எனில் கருணா கொழும்பில் தனக்கான பாதுகாப்பைத் தானே தேடிக்கொண்டிருத்தல் வேண்டும். அதாவது இப்பாதுகாப்பு ஏற்பாடானது சிறிலங்கா ஆயுதப்படையினர் தொடக்கம் விடுதலைப்புலிகள் வரையில் தாக்குப்பிடிக்கத்தக்கதானதாக இருத்தல் வேண்டும்.

ஏனெனில் கருணாவிற்கு ஆபத்தானது எத்தரப்பில் இருந்தும் வருதல் கூடும். விடுதலைப் புலிகளின் இயக்கவிதிமுறைகளுக்கு எதிராக செயற்பட்டதினால் விடுதலைப்புலிகளிடம் இருந்தும் வரலாம். கடந்த காலத்தில் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராக போரிட்டதினால் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பில் இருந்தும் வரலாம்.

இந்நிலையில் கருணா கொழும்பில் பாதுகாப்புடன் ஒழித்து வாழ்தல் என்பது சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பிற்குத் விடுவிக்கப்படும் சவாலாகவே கொள்ளத்தக்கதொன்று ஆகையினால்த் தான் தகவல்த்துறை அமைச்சர் மங்கள சமரவீர இராணுவத் தரப்பின் ஒரு தரப்பினர் உதவியிருக்கலரம் எனப்பட்டும்படாமலும் கூறியிருந்தார்.ஆனால் அரசிற்கும் இதற்கும் தொடர்பில்லை என்ற ரீதியில் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தார்.

இதனையே இராணுவத்தளபதி பல்கல்ல தற்போது மறுத்துள்ளார். இராணுவத்தரப்பிற்குத் எந்தவித தொடர்பும் இல்லை என ஒட்டுமொத்தமாகவே நிராகரித்துள்ளார்.இதனைப் பார்க்கையில் இராணுவத்தளபதிக்கு கருணாவிற்குத் தாம் அடைக்கலம் கொடுத்து வைத்திருப்பதெனக் கூறுவது அவமானகரமானதாக இருப்பது போல் தெரிகிறது. ஏனெனில் விடுதலைப்புலிகளை எதிர் கொண்டு வெற்றி பெறுதல் என்பது சாத்தியமற்றதொரு நிலையில் கருணாவை சதி முயற்சி மூலம் அரவணைத்திருப்பதாக விமர்சனம் எழலாம் என அவர் கருதியிருக்க முடியும்.

ஆனால் அதைவிட அவமானகரமானதே கருணா இராணுவப் பாதுகாப்பின்றிக் கொழும்பில் வாழுதல் என்பது. கருணா கொழும்பிற்கு வரவில்லை என்றோ அங்கு தங்கியிருக்கவில்லை என்றோ இராணுவத்தளபதி கூறிவிட முடியாது. ஏனெனில் கருணா கொழும்பிற்கு வந்து சேர்ந்ததை அதற்கு ஏற்பாடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர்மௌலானாவே ஒப்புக் கொண்டுள்ளார். இதற்காக அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையே தாரை வார்க்கவே வேண்டியதும் ஆகிவிட்டது.

இதனால் கருணாகொழும்பிற்குள் பிரவேசிக்கவில்லை என இராணுவத்தளபதியால் சாதிக்கமுடியாது போய்விட்டது. அவ்வாறு இல்லாது விட்டால் கருணா கொழும்பிற்குள் பிரவேசிக்கவில்லை எனவும் மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தனது அணியினருடன் நின்றுசெயற்படுவதாகவும் அவர் கூறியிருக்கவும் கூடும். இதற்கு ஏற்றவகையிலேயே "கருணா தப்பி ஓடல்" விவகாரம் தொடர்பான தகவல்கள் வெளிவரும் முன்னர் கிழக்கில் சில செயற்பாடுகளில் இராணுவம் ஈடுபட்டும் இருந்தது.

இந்நிலையில்த் தான் கருணாவிற்கு தாம் பாதுகாப்பு அளிக்கவில்லை எனப் பலவீனமானதொரு நிலையில் இருந்து இராணுவம் பேசவேண்டிவந்தது. ஆனால் இப்பேச்சானது கருணாவிற்குப் பாதுகாப்பை இராணுவம் வழங்குவதாக ஒப்புக் கொள்வதைவிட அவமானகரமான தொன்றாகவே உள்ளது. ஏனெனில் தனது வீட்டிற்குள்இருப்பதனை இல்லை என்று கூறும் குருடனைப்போல் அல்லவா அவர் பேச வேண்டியுள்ளது.

# 80களில் கைக்கொண்ட கலாச்சாரத்தையே ஜே.வி.பி. இப்பொழுதும் தொடர்கிறது

### எதிர்க்கட்சித்தலைவர் ரணில்

1988-89 காலப்பகுதியில் பாராளுமன்றச் செயற்பாடுகளை நிறுத்த வெளியிலிருந்து செயற்பட ஜே.வி.பி.யினர் இன்று பாராளுமன்றத்தினுள்ளேயே நிகழ்த்துகிறார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தென் பகுதியில் நடை பெற்ற மாகாணசபைத்தேர்தலுக்கான பிரச்சாரக்கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது

பதவிக்கு வந்துள்ள சந்திரிக்காவின் ஐ.ம.சு.முன்னணி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை விவசாயிகளுக்கான அடிக்கட்டுப் பசளை விலையை 350 ரூபாவாகக் குறைக்கப்போவதாகக் கூறி நிலப்பசளையின் விலையை 250 ரூபாவால் அதிகரித்தது, பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதாகக் கூறியது ஆனால் அவர்களைப் பீயிற் சிக்காகவே இணைத்துள்ளது.

நாம் பதவியிலிருந்தபோது அனுராதபுரம் பொலநறுவை மாவட்டங்களில் நீரைக் கட்டுப்படுத்தவில்லை தற்போது அங்கு தண்ணீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டு விவசாயிகள் அல்லற் படுகின்றனர் இது தொடருமாயின் இவ்வரசின் எதிர்காலம் கேள்விக்குரியதாகவே இருக்கும். சந்திரிகா எமது அமைச்சுப் பதவிகளை திருடிய வேளை டொலரின் மதிப்பு 93 ரூபாவாக இருந்தது. ஆனால் இப்போது 103 ரூபாவாக அதிகரித்திருக்கிறது.

கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் ஜே.வி.பி வீடு வீடாகச் சென்று இரு பெரும் கட்சிகளும் பழைய அரசியலிலேயே மூழ்கியிருப்பதாகக் கூறி புதிய அரசியற் கலாச்சாரத்தை ஏற்படுத்தப்போவதாகக் கூறியது. ஆன்லால் தற்போது நடப்பதைப்பார்க்குமிடத்து 80களில் அது கைக் கொண்ட கலாச்சாரத்தையே தொடர்ந்து பின் பற்றுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

## 20ஆம் திகதிக்குமுன் பாராளுமன்றை கூட்டக்கோருவது நியாயமில்லை

### -தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எதிர்கட்சிகள் பாராளுமன்ற அமர்வை எதிர்வரும் 20 அம் திகதிக்கு முன்னர் நடத்த வேண்டும் எனக் கோருவது நியாயமற்ற செயல் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரான தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான எதிர்கட்சிகளே 20 ஆம் திகதி பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுத்தன. இந்த நிலையில் தற்சமயம் பாராளுமன்றத்தை 20 ஆம் திகதிக்கு முன்னர் கூட்ட வேண்டும் என அந்த எதிர்கட்சிகள் கோருகின்றன. இது யதார்தமற்ற செயல் எனவும் தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். இந்த வாரம் எதிர்கட்சிகள் சபாநாயகரை சந்தித்து பாராளுமன்றம் அவசரமாக கூட்டப்பட வேண்டும் என கேட்கவுள்ளமை தொடர்பிலேயே இந்த கருத்தை தினேஸ் குணவர்த்தன வெளியிட்டுள்ளார். (32)

### –பொலிஸ் நிலையத்தைக் கண்காணிக்கச் சென்ற–

## ம.உ.ஆ.உத்தியேகத்தர் மீது பொலிசார் கடும் தாக்குதல்

சிறிலங்காவின் பேலியகொட பொலிஸ் நிலையத்தை கண்காணிக்கச் சென்ற இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் மூன்று உத்தியோகத்தர்கள் பொலிசாரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இப் பொலிஸ் நிலையத்தில் கைதிகள் துன்புறுத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடுத்து, அங்கு கண்காணிப்பு நடவடிக்கைக்காகச் சென்ற மனித உரிமை ஆணைக்குழுவின் உத்தியோகதர்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர். முன்னர் ஒரு தடவையும், கண்காணிப்பு நடவடிக்கைக்காகச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் பேலியகொட பொலிசாரால் கடுமையாக தாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இம்முறை இடம்பெற்ற தமது உத்தியோகஸ்தர்கள் மீதான இந்தத் தாக்குதல் தொடர்பாக உயர்நீதிமன்றம் வரை செல்வதற்கு மனித உரிமை ஆணைக்குழு முடிவெடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## ரவி கருணா நாயக்காவுக்கு எதிராக சாட்சியம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள முன்னாள் அமைச்சர் ரவி கருணா நாயக்க மீதான சாட்சியம் ஒன்றை கொழும்பு குற்றப்புலனாய்வுத் துறையினர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர். பொதுச் சொத்துகள் சட்டத்தின் கீழ் இந்தச் சாட்சியம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறைந்த பெறுமதியைக் கொண்ட கட்டடம் ஒன்றைக் குத்தகைக்குப் பெறுவதற்காக ரவி கருணாநாயக்கவினால் அரசாங்கத்தின் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் துறை கூறுகிறது. இது தொடர்பில் அண்மையில் அவரை கைது செய்யத் தாம் முற்பட்ட போதும் அது ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகளால் தடுக்கப்பட்டதாகவும் குற்றப்புலனாய்வுத் துறை தெரிவிக்கிறது. இதேவேளை

தம்மை கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி ரவி கருணா நாயக்க தாக்கல் செய்தமனு இன்று கோட்டை நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. அதன் போது சட்டமா அதிர் அது தொடர்பில் தமது சட்ட விளக்கங்களைச் சமர்பிக்கவுள்ளார். (32)

# சிறிலங்காவின் கடல் எல்லையை 500 கடல் மைல்கள் விஸ்தரிக்க நடவடிக்கை

சிறிலங்காவின் கடல் எல்லையை மேலும் 500 கடல் மைல்கள் விஸ்தரிக்க மீன்பிடி நீரியல்வள அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இது தெடர்பாகச் செயற்திட்டம் ஒன்றை தயாரித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளை மீன்வளத்துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கடற்பிரதேசங்களை வரையறை செய்யும் ஐ.நா. அமைப்பின் பணிகள் வரும் 2009 ஆம் ஆண்டளவில் பூர்த்தியாக்கப்படும் அதன்படி அதற்கு முன்பாக சிறி லங்காவின் கடல் எல்லை தொடர்பாக திட்டவட்டமானவரையறையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஆழ்கடற் பிரதேசத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கான நிதியையும் ஆலோசனைகளையும் வெளிநாடு ஒன்றிலிருந்து பெறவிருப்பதாகவும் சுமார் 700 கடல்மைல் பரப்பள விலுள்ள அனைத்து உயிருள்ள, உயிரற்ற வளங்களைப் பாதுகாப்பதென முடிவெடுக்கப் பட்டுள்ளதாகவும் மேற்படி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கரெஜஸ் சிறிலங்கா வர இரண்டுமாதங்கள் பிடிக்கும்

அமெரிக்கா சிறிலங்காவுக்கு வழங்கியுள்ள கரெஜஸ் கரையோரக் கண்காணிப்புக் கப்பல் இன்னும் இரண்டு மாதக்காலப் பகுதியிலேயே சிறிலங்காவுக்குக் கொண்டு வரப்படும் என சிறிலங்கா கடற்படை தெரிவித்துள்ளது. அண்மையில் இந்தக் கப்பல் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியினால் அமெரிக்க பென்டகனில் வைத்துப் பொறுப்பேற்கப்பட்டது. ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான இந்தக் கப்பல் இலவசமாகவே வழங்கப்பட்டது. அமெரிக்கக் கரையோரக் காவல்துறையினரால் சேவையில் இருந்து ஒதுக்கப்பட்ட இந்தக் கப்பல் தற்சமயம் புனர்நிர்மானம் செய்யப்படுகிறது. அதே நேரம் இதில் கடமையாற்றவுள்ள அதிகாரிகளுக்கும் தற்சமயம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறிலங்காவுக்குக் கொண்டு வரப்படும் இந்தக் கப்பல் சிறிலங்கா இந்திய கடற்பகுதியில் பயன்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# நெல்லியடியில் சுகாதார அமைப்புக்களால் பாவனைக்குதவாத பொருட்கள் அழிப்பு!

தமிழீழ சுகாதார சேவையினரும், பொதுச் சுகாதாரப் பிரிவினரும் இணைந்து நேற்று யாழ். நெல்லியடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

நெல்லியடிப் பகுதியில் உள்ள உணவகங்கள், மருந்தகங்கள், குளிர்பானக் கடைகள், உணவுப் பொருள் உற்பத்தி நிலையங்கள் என்பன மீது திடீரென மேற்கொண்ட இந்நடவடிக்கைகளின் போது மனித பாவனைக்கு உதவாத குளிர்பான வகைகள், உணவுப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகள், பால்மாக்கள் என்பன கைப்பற்றப்பட்டு உரியவர்களின் அனுமதியுடன்அவை அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இவ்வாறான பொருட்களை வைத்திருந்தவர்களுக்கு சுகாதாரத்தைப் பேணுவது தொடர்பாக அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. (33)

## வீதி விபத்தில் இரு கார்கள் சேதம்

முள்ளியவளைப் பிரதான வீதியில் இரு மோட்டர்வண்டிகள் விபத்துக்குள்ளாகியுள்ளன.

மேற்படி வீதியில் முள்ளியவளையில் இருந்து தண்ணீர் ஊற்று நோக்கிச் சென்ற மோட்டார்வண்டியும் தண்ணீரூற்றில் இருந்து முள்ளியவளை நோக்கிவந்த மோட்டார்வண்டியும் முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையினை அண்மித்த பகுதியில் விபத்துக்குள்ளாகி மோட்டார் வண்டிகள் இரண்டும் பலத்த சேதத்துக்குள்ளான போதிலும் மோட்டா வண்டி ஓட்டுனர்கள் இருவரும் தெய்வாதீனமாக எதுவித காயங்களும் இன்றித் தப்பித்துக் கொண்டனர். மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 7.45 மணியளவில் இடம்பெற்றது. (20)

## ஜுலை...

உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவரான அத்துராலியே ரத்ன தேரரும் இவ்விடயம் தொடர்பாகபிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் எதிர்க்கட்சிகள் கடிதம் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மகிந்தசமரசிங்க தெரிவித்துள்ளதாவது, இவ்வாரத்துள் பாராளுமன்றக் குழு கூட்டத்தைக் கூட்டுமாறு சபாநாயகரிடம் வலியுறுத்தியிருப்பதாகவும் ஆளும் ஐ.ம.சு.முன்னணி வன்முறை மூலம் பாராளுமன்ற நிகழ்வுகளை அம்பலப்படுத்துவதாகத் தாம் எண்ணுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துராலியே ரத்ன தேரர் தெரிவிக்கும்போது பாராளுமன்றம் ஒரு மாதத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை மட்டுமே கூடியுள்ளதாகவும், முக்கியமான எந்த விவகாரமும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை எனவும் ஒரு சிறு சட்டமூலம்கூடஇதுவரை பாராளுமன்றதால் நிறைவேற்றப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளதுடன், இதனாலேயே தாம் இவ்வாறான ஒரு மகஜரைச் சபாநாயகரிடம் கையளிக்க முன்வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

## யாழ். பல்கலை..

தலுக்குமுன் பூரண விசாரணை நடத்துமாறு காரணங்களை குறிப்பிட்டு பல தடவைகள் மனுச்செய்திருந்தேன். அதை பரிசீலிக்க முடியாதுள்ளது என்று ஏன் எழுதப்பட்டது இதற்கான விளக்கம்.

- இதை விசாரித்து உடனடியாக முடிவு தரப்படல் வேண்டும்.
- 2001ஆம் ஆண்டிலிருந்து இப்பொழுதும் நான் மருத்துவபீட மாணவி ஆனால் மருத்துவபீட மாணவி அல்ல என்ற நிலையில் வெளியில் நிறுத்தப்பட்டுள்ளேன். இதற்கான நஷ்டஈடு தரப்படல் வேண்டும்.
- தொடர்ந்தும் கல்வி பயில்வதற்கு ஒரு தெளிவான, பயமற்ற, சந்தோஷமான சூழ்நிலையையே எனது எதிர்காலக் கல்வியைத் தொடர்வதற்கு ஏற்புடையது. ஆகவே நான் வேறு பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்வதற்கு துணைவேந்தரின் சிபாரிசு. (33)

## கிழக்கில்...

யில்

ஆனால் விடுதலைப்புலிகளின் இந்தக் குற்றச்சாட்டை எங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை.

விடுதலைப்புலிகள் தமது மனதை மாற்றிக் கொள்வார்கள் என நம்பினோம் ஆனால் அவர்கள் தமது மனதை மாற்றிக் கொள்ளவில்லை என்றார் ஹக்றூவ் கொக்லண்ட்.

கிழக்குப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை உள்ளூர் அதிகாரிகளுடன் பேசப்போவதில்லை என்ற தமது நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் தெளிவாக இருக்கின்றனர். இனிமேல் என்ன செய்யப் போகின்றீர்கள் என வினவியபோது.

இதைத் தீர்ப்பதற்கு ஒரேவழி இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நாம் தொடர்ந்து போய் வந்து தொடர்பைப் பேணிக்கொண்டிருக்க வேண்டியது தான்.

ஆகவே நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்கிறார் கொக்லண்ட்.

## யாழ்.இல்....

ஆஜராகாததனால் இவ்வழக்கு அடுத்தமாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எனினும் மேற்குறிப்பிட்டகால எல்லை தமக்குரிய சட்டத்தரணியை ஒழுங்கு செய்வதற்கு போதாதிருப்பதாகவும், இதனால் மேலும் காலநீடிப்புச் செய்து மேற்படி வழக்கினை நடத்துமாறும் ராஜபக்ஷ நீதிமன்றத்திடம் கோரினார். ஆனால் இவரது கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிமன்றம் அதனை முற்றாக நிராகரித்து ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திகதிக்கே விசாரணைகளை ஒத்திவைத்தது.

இதேவேளை காணாமல் போனார் தொடர்பில் செய்யப்பட்டிருந்த மேலும் 8 வழக்குகளும் யாழ். மேல் நீதிமன்ற நீதவான் எஸ்.வரதராஜவினால் நேற்று விசாரணை செய்யப்பட்டு அவையும் மேலதிக விசாரணைகளுக்காக அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைகக்கப்பட்டன.

இதே வேளை லான்ஸ் கோப்றல் ராஜபக்ஷவை யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைப்பதற்கு யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளுக்காக நேற்று யாழ் மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ராஜபக்ஷவினைமேலதிக விசாரணைகளுக்காக அடுத்த மாதம் 28 ஆம் திகதி யாழ். மேல் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யும் வரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு யாழ் மேல் நீதவான் வரதராஜா சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தர விட்டார்.

எனினும் யாழ். சிறையில் உள்ள பாதுகாப்பு பலவீன நிலைமைகளைக் காரணம் காட்டி கொலையாளியாக நிருபிக்கப்பட்ட இவரை இங்கு தடுத்து வைப்பது சாத்தியம் இல்லை எனச்சுட்டிக்காட்டியே இதற்கு சிறைச்சாலை அத்தியட்சகர் மறுப்புத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து குற்றவாளியான ராஜபக்ஷவை வெலிகடைச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் பலாலி விமான நிலையம் வரை அவருக்குப் பாதுகாப்பு வழங்கும்படியும் கட்டளையிட்டார். மேலும் காணாமற்போனோர் தொடர்பான மேற்படி வழக்குகளில் இதுவரை ஆட்சேபனைகள் அழைக்காத வழக்குகளின் ஆட்சேபனைகளை மன்றில் சமர்ப்பிப்பதற்கு இறுதித் தவணையாக 28.07.2004 ஆம் திகதி வழங்கப்பட்டது.

இதேவேளை ராஜபக்ஷ சார்பில் ஆஜராக அரச சட்டத்தரணி செல்வி சுகந்தி. கந்தசாமி மறுப்புத் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

## கருணாவிற்கு...

களை வைத்துக் கொண்டுதான் நாங்கள் இன்று அவர்களுக்கு அதை வலியுறுத்திக் கூறியிருக்கின்றோம் அவர்கள் நேரடியாகவே இராணுவப் புலனாய்வு அமைப்பினுடைய பாதுகாப்பின் கீழ் இவ்வளவு காலமாக பாதுகாக்கப்பட்டிருக்கின்றார்கள் அது மட்டுமல்ல கிழக்கிலே நடந்த படுகொலைகள் சம்பந்தமாகவும் கருணாவுக்கு சம்பந்தம் இருப்பதை உறுதி செய்திருக்கின்றார்கள் ஆகவே இப்படியான நிலைமைகள் தொடருவது இந்த யுத்தநிறுத்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்திக் கொண்டு போவதற்குப் பல நெருக்கடிகளை உருவாக்கும் என்பதை இன்று அவர்களுக்கு எடுத்து விளக்கியிருக்கின்றோம்.

** இராணுவ அதிகாரிகளுடனான மாதாந்த சந்திப்புகளில் கலந்து கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டனவா?*

அதை நாங்கள் இன்று தெளிவாக கூறியிருக்கின்றோம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திலே கருணாவை இராணுவம் தனது பாதுகாப்பில் வைத்துக்கொண்டு அங்கே பதற்றத்தையும் குழப்பத்தையும் படுகொலைகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நடவடிக்கை தொடருகின்ற சூழலில் அங்குள்ள எமது தளபதிகள் படைத்தரப்பைச் சந்திப்பதைத் தவிர்த்தார்கள் அப்படியான நடவடிக்கைக்கு முடிவு காணும்வரை அதற்குத் தீர்வு காணும் வரை அப்படியான சந்திப்புக்களை எமது தளபதிகள் தவிர்த்துக் கொள்வார்கள்.

** வட மாகாணத்தில் சந்திப்புப் பற்றிய நிலைப்பாடு எப்படி உள்ளது?*

வடமாகாணத்தைப் பொறுத்த வரையிலே ஏற்கனவே மாவட்டம் தோறும் எங்களுடைய அரசியல் பொறுப்பாளர்களோடு அவர்கள் தேவை ஏற்படும் போது கலந்துரையாடி வருகின்றார்கள் அந்த நடைமுறை தொடர்ச்சியாகப் பேணப்படும்.

** இப்பொழுது போர்நிறுத்த ஒப்பந்தத்தின் நிலைப்பாடு எப்படியிருக்கிறது?*

போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பொறுத்த வரையில் இப்போது அண்மைக்காலத்தில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்பு போர் நிறுத்த நடைமுறைகள் சம்பந்தமாகப் பல குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றது. கடற்போக்குவரத்து, தரைப்போக்குவரத்துப் போன்ற இயல்பாக நடந்து கொண்டிருந்த நடவடிக்கைகள் மீது சில அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. ஆகவே இதைநாங்கள் ஏற்றுக் கொளளமுடியாது என்பதை இன்று நாங்கள் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெளிவாக கூறியிருக்கின்றோம் மிகவிரைவில் இதற்கான தீர்வைக் காண வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

** கருணா விவகாரம் போர் நிறுத்த ஒப்பந்தத்தினது ஆன்மாவை க்றுகின்ற அளவில் இருக்கும் ஒரு விடயமாக இருக்கின்றது இந்த நிலையில் இந்த போர் நிறுத்தத்தினுடைய தன்மை எப்படியிருக்கிறது?*

நிச்சயமாக இதில் எந்த சந்தேகமும் இருக்கத் தேவையில்லை என நினைக்கிறேன். கருணாவினுடைய நடவடிக்கை இன்று பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றன. கருணாவின் பெயரில்-கருணாவைப் பாதுகாத்துக் கொண்டு படைத்தரப்பாலேயே இந்தக் குழப்பங்கள் ஏற்படுத்தப்படுவதை நாங்கள் உறுதி செய்திருக்கின்றோம். அண்மைக்காலத்தில் நாங்கள் அதை வெளிப்படுத்தி வந்தாலும் அண்மையில் இதை மிக ஆணித்தரமாக உறுதி செய்திருக்கின்றோம். கருணாவோடு நீண்டகாலமாக இருந்து விட்டுத் தப்பிவந்து எங்களோடு இணைந்த போராளிகள் இன்று அதை உறுதிப்படுத்துகின்றார்கள். ஆகவே அந்த நிலையில் இது சமாதான முன்னெடுப்புக்களுக்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாக நடைமுறைப் படுத்துவதிலும் இன்றைக்கு பாரிய ஒருஅச்சுறுத்தலையும் நெருக்கடியையும் ஏற்படுத்தியிருக்கின்றதை நாங்கள் அவர்களுக்கு தெளிவாக்கியிருக்கின்றோம்.

*அடுத்தகட்ட போர்நிறுத்த நடவடிக்கைகள் எப்படி இருக்கப்போகின்றது?*

அது எங்கள் கையில் இல்லை படைத்தரப்பினுடைய கையிலும் அனுசரணையாளராக இருக்கின்ற நோர்வேத் தரப்பினதும் கண்காணிப்புக் குழுவினரதும் கையிலே தான் இருக்கின்ற தென்பதை இன்று நாங்கள் அவர்களுக்கு முன்வைத்திருக்கின்றோம். ஆகவே எதிர்காலம் அவர்களது கையிலே தான் இருக்கின்றது அவர்களுடைய நடவடிக்கையைப் பொறுத்துத்தான் இதற்கு நாங்கள் ஒரு முடிவை சொல்லக்கூடியதாக இருக்கும்.

*இன்று நீங்கள் அரசாங்கத்திற்கு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினூடாக அனுப்பி வைக்கின்ற செய்தி என்ன?*

அரசாங்கத்திற்குத் தெளிவாக கூறியிருக்கின்றோம். கருணா என்பவர் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டதிலே பல படுகொலைகளையும் செய்து பல குழப்பங்களையும் ஏற்படுத்தி பதற்ற நிலைகளை ஏற்படுத்தி அங்கே சமாதான முன்னெடுப்புக்களும் யுத்தநிறுத்த சூழ்நிலைக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றார்.

குற்றமிழைத்த ஒருவரை குறிப்பாக பல படுகொலைக்குக் காரணமாக இருந்தவரை இராணுவம் பாதுகாக்கிறது குறிப்பாக அண்மையில் நடந்த பத்திரிகையாளர் நடேசன் அவர்கள் கொல்லப்பட்டதும் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் கொல்லப்பட்டதற்கும் கருணா சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது கூட ஓரளவு உறுதிசெய்யப்பட்டிருக்கின்றது. இதுபோல பலபடுகொலைகள் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் அங்கு பதற்றநிலை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது இதற்கு காரணமானவர் கருணா. ஆகவே கருணாவை இராணுவம் பாதுகாத்துக் கொண்டும் அரசாங்கம் அவரை பயன்படுத்திக் கொண்டிருக்கும் வரை அவர்கள் இந்த சமாதான முன்னெடுப்புக்களில் ஒரு நம்பகத் தன்மையோடு நடப்பதாக இல்லை என்பதை நாங்கள் இன்று தெளிவாக வெளிக்காட்டியிருக்கின்றோம். ஆகவே இது ஒரு பாரிய நெருக்கடியான சிக்கலான பிரச்சினையாகத்தான் நாங்கள் கருதுகின்றோம் என்றார்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் சிறிலங்கா வான் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியில் வந்திறங்கிய போர்நிறுத்தக் கண்காணிப்புத் தலைவர் தலைமையிலான குழுவினர் 1.45 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடன் பேச்சுக்களை நடத்தினர். சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் அவர்கள் தமிழீழ காவல்த்துறை பொறுப்பாளர் நடேசன் அவர்கள் ஆகியோரும் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர். (ச,சோ)

## இருதய சத்திர சிகிச்சைக்கு உதவுவீர்

செல்வன் நல்லையா தேனுஜன் வயது 08 ஒரு இதய நோயாளியாவார். வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட இக்குழந்தைக்கு அவசரமாக இதய அறுவைச் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு 4 இலட்சம் தேவைப்படுகின்றது. இக்குழந்தையின் வளமான எதிர்காலம் நலமாக இருக்க தொண்டுள்ளம் படைத்தோர் யாவரும் உதவ வேண்டுகிறோம்.



மேற்படி சிறுவனின் இருதய சத்திர சிகிச்சைக்கு உதவ விரும்புவோர் கீழ் வரும்வங்கிக்கணக்குக்கு நேரடியாகவோ அல்லது கிளிநொச்சி மருத்துவ சங்கத் தின் ஊடாகவோ தாராளமாக உதவு மாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கணக்கு இலக்கம் :- 29073,
இலங்கை வங்கி,
கிளிநொச்சி. அல்லது மருத்துவச் சங்கம், கிளிநொச்சி. "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது"

## சாவு அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை இராசேந்திரம்(ராசு)

**(தனுசன் நகையக உரிமையாளர்)**

மண்டதீவைப் பிறப்பிடமாகவும் 132 ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசேந்திரம் அவர்கள் 28.06.2004 அன்று வவுனியாவில் காலமானார். இவர் காலம் சென்ற கணபதிப்பிள்ளை சின்னம்மாவின் அன்பு மகனும், அமலோற்ப வராணி (அமலேஸ்)யின் அன்புக்கணவரும், தனுசன், தினேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
**பொ.ஜெயராஜ்**
கிளிநொச்சி.

(சி.9872)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழ்நாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.